# Literary Efforts
# of J.W.Barr-Kumarakulasinghe
# and his children

## A compilation of verse, writing and reference
## from 1875-1945

**2002**

This is an attempt to gather together the literary efforts of J.W.Barr-Kumarakulasinghe and his children. These two generations were prolific writers between 1875 and 1950, and space constraints do not allow including within this document all the published material. However, references to these books and publications made here.
This also probably the occasion to thank Daya Winslow who provided all the Tamil, verse and letters written A. Barr-Kumarakulasinghe. The documents Daya provides consist of over 95% of the material within this book. Also many thanks to Easan Kesavan who typed all the material into the Tamil fonts.
Kesavan makes note that the following letters have been changed from the original documents, as these letters do not currently exist in the modern Tamil alphabet.

| **Old** | **New** |
|---|---|
| னை | னை |
| ணை | ணை |
| றா | றா |
| ளை | ளை |
| லை | லை |
| ணா | ணா |
| னா | னா |

Joseph William Barr-Kumarakulasinghes (JWBK), children were Thayalnayagam, Kanakanayagam Charles (KCBK) , Richard Rasanayagam, Raneenayagam, Singanayagam S, Arunthathinayagam, Mangalanyagam, Ariyanayagam and Chelvanayagam. Much of the material in this booklet if from ABK, with some material and references of JWBK, KCBK and Mangalanyagam.

Sereno Barr-Kumarakulasinghe
Dec 2002

**The Tamil Methodist Hymnal: (கீர்த்தன கீத சங்கிரகம்) ............................................ 4**
page xiii: Table of contents ........................................................................................ 7
Hymn 155: by A. B. Kumarakulasinghe ........................................................................ 8
Hymn 332: by A. B. Kumarakulasinghe ........................................................................ 9
Hymn 432: by J. W. B. Kumarakulasinghe .................................................................. 10
Hymn 438: by K. C. Kumarakulasinghe ..................................................................... 11
**Publications and References) ................................................................................. 12**
**Book of Poems (பொற்பாத துத்தியம ) by A. Barr-Kumarakulasighe (1943)............ 13**
**Book of Verse (செபமாலை) by A. Barr-Kumarakulasighe ........................................ 25**
**Letter and Verse ........................................................................................................ 66**
Letter from ABK to Wife 10th August 1942 .................................................................. 66
Letter from ABK to Wife 11th August 1942 .................................................................. 66
Verse to Wife (மலருக்கு )by ABK ................................................................................ 68
Verse Published in Newspaper by ABK ...................................................................... 69
Verse on Pride (வெண்பா)by ABK .................................................................................. 69

இலங்கை மெதடிஸ்த
கிறிஸ்த சபை

# கீர்த்தன கீத சங்கிரகம

சினட் சங்கத்தின் தீர்மானப்படி
அச்சிடப்பட்டது
1957

# PREFACE

Methodism came to the Tamil people in Ceylon in 1814 and for its worship during its early years, used translations of the Wesley hymns. Most of these translations were by the Rev. Dr E. Hoole and the Rev. Dr. Peter Percival.

It was in 1981 , the same year that the English revised version of the Bible appeared that there was published the first complete Tamil Methodist hymn book. It contained 1026 hymns, and comprised translations of practically all the hymns in John Weseley's famous collection of 1780. The chief inspirer of this monumental work was the Rev. Dr. John Kilner , for many years Chairman of the North Ceylon District and, at that time, Secretary of the Wesleyan Missionary Society in London. The Chairman of the North Ceylon District in 1881 was the Rev. E. Rigg.

During the succeeding years that the 1881 hymn book was in use , it became clear that most of the translations needed revision and that a good number of the hymns were suitable for private devotion only. Besides, largely as a consequence of the work of Vethanayagam Sastrials of Tanjore, the Tamil church both in India and Ceylon had come to use many lyrics composed originally in the Tamil tongue. The result was that in 1901, during the chairmanship of the Rev G. J. Trimmer a revised edition of the hymn book with only 400 hymns was published A collection of lyrics having been published separately.

The Rev. D. P. Niles who was the editor and reviser of the 1881 collection was entrusted with the task of preparing this second edition also Mr Trimmer in his preface to this edition writes: " many missionaries and ministers have shared in the labour of producing this book. To it they have devoted time and talent. The work has been a labour of love to all. Among the number one names stands pre-eminent that of the Rev. D. P. Niles . With a full knowledge and command of graceful and fluent Tamil , he brought to this work the mind of a poet and the ripened experience of a Christian life".

From 1901 the use of lyrics grew apace so that it was found necessary to undertake a publication of a larger lyric book together with a revised but shortened hymn book. This was done in 1925 during the chairmanship of the Rev A. E. T Selby assisted by the Rev R. A. Winslow and Mr W. D. Niles.

But soon another change took place in the needs and practices of the church. On the one hand, under the influence of the work of men like Pundit H A. Krishnapillai of Palamcottah, ther came to be used in the public and private worship of the Tamil church a large nuber of thevarams ; while , on the other hand, there also came to be used , in increasing measure translations of songs found in the "Sacred Songs and Solos. " Since many of these songs had choruses they filled more naturally into the singing forms of the Tamil people.

There was, therefore brought out in 1937, during the chairmanship of the Rev. E. M.Weaver a composite publication, containing both hymns and lyrics, in which were included many thevarams together with a fair number of translations of songs from the "Sacred songs and Solos." The editors of this book were the Revs. V. R. Samuel and R. V. Thambipillai.

The present book is a natural development of this history . It was essential to review all the lyrics in use so that a selection could be made of those which had stood the test of time. It was essential also to subject these lyrics to theological scrutiny. Then, there was the need to widen the range of authors of lyrics, taking care particularly to include compositions of authors who belonged to the Tamil Church in Ceylon itself. Besides this there was the question of maintaining, among the translations included, a balance between translations of songs with choruses and translations of the classic

hymns. Care too had to be exercised both to see that as many lyrics as possible were includeed which were renderings of the Pslams; as well as to see that a fair selection was made of lyrics sung antiphonally, whichtype of singing is a feature of worship among the Tamil people and which, at the present time, the Tamil church is learning to use. A few lyrical compositions have also been includd because of their popularity as songs suitable to be sung at conventions.

The Rev. D. T. Niles has worked as chief editor in the preparation of this present book assited by a committee of which the Rev. S. B. Saravanamuttu has been convener.

A constant aim in the composition and arrangement of this book has been to put into the hands of the Tamil people no less a book of private devotion than a book of public worship. That this book will be found useful in both these ways is our hope and prayer.

Let the last words of this preface be from the pen of John Wesely himself. Commending the collection of hymns which he published in 1780, he wrote as follows :- " That which is of infinitely more moment than the spirit of poetry is the spirit piety. And I trust, all persons of real judgement will find this breathing through the whole Collection. It is in this view chiefly, that I would recommend it to every truly pious Reader as mean of raising or quickening the spirit of devotions; of confirming his faith; of enlivening his hope; and og kindling and increasing his love to God and man.

There can be no higher commendation of a book hymns, and we seek no higher commendation for this collection.

12th July 1957,

James S. Mather
Chairman

**page xiii: Table of contents**



எச். ஏ . கிருஸ்ணபிள்ளை
பாளயம்கோட்டை : H. A. Krishnapillai
29, 53, 102, 207, 210, 315

கனம் அழகசுந்தரம் கிங்ஸ்கரி
சாவகச்சேரி யாழ் : Rev. F. A. Kngsbury
267

எல். வி. கிளாறென்ஸ்
உடுப்பிட்டி யாழ் :L. V. Clarence
11,206

எஸ். ஐ. கிறிஸ்மஸ்
யாழ்ப்பானம் : S. I. Christmas
334, 380

ஏ. எம் கே குமாரசாமி
சாவகச்சேரி யாழ் : A. M. K Cumaraswamy
65.

ஏ. பி. குமாரகுலசிங்கி
தெல்லிப்பழை யாழ் :A. B. Kumarakulasinghe
155, 332

கே சி. பி. குமாரகுலசிங்கி
தெல்லிப்பழை யாழ் : K .C . B. Kumarakulasinghe
438

ஜே உ பி. குமாரகுலசிங்கி
தெல்லிப்பழை யாழ் : J. W.. B. Kumarakulasinghe
432

சாது கொச்சிக்குஞ்சு
திருவாங்கூர் : Sadhu Kochikunju
103

**Hymn 155: by A. B. Kumarakulasinghe**
155

## தேவாரம

1 ஆதியே ! அன்பே அப்பனே ! இனிய
அன்னையே ! அருணிறைந் திலங்கும்
சோதியே எனக்காய்ச் சோரிநீ சிந்தித்
துயர்பல குரசினிற் பட்டாய்
நீதனா முன் றன் நீள்தயை எண்ணி
நிதமுமென் மனநெகிழ்ந் துன்றன்
பாதநேர் பணியப் பரிவுடன் கிருபை
பணித்தருள் கருணை வா ரிதியே !

2 பரிந் துநீ யெனக்காய்ப் பட்டுள பாட்டைப்
பாவியேன் பணிவுடன் நினைத்தென்
இருள்மனம் நெக்கஇ இருவிழி இறைப்ப
இடைந் துன திணையடி வந்தேன்
குருசினில் வடிந்த குருதியா லென்றன்
குறைநிறை யுளந்தனைக் கழுவித்
திருவருள் அளித்தென் சிந்தையிற் கலப்பாய்
செல்வமே ! யேசுநா யகனே !

3 காட்டியே உன்னைக் கொடுக்குமுன் இரவு
கசிந் துநீ சீஷருக் கன்பாய்
ஊட்டிய மொழியை உணர்ந்துயான் அடியேன்
ஒளிபெற உன்பதம் வந்தேன்
ஈட்டிநற் கிருபை என்பவம் போக்கி
இன்புடன் இருகரம் எடுத்தே
நீட்டிநின் சரணம் நிதமுநான் பற்ற
நிமலனே ! அருள்புரி வாயே.

-----------------------

**Hymn 332: by A. B. Kumarakulasinghe**

332

அரிகாம்போதி ருபகதாளம்

அளவே கடந்து னடியே பிரிந்த
ததனால் வருந்து - துயராலே
அகநாள் நெகிழ்ந்து சிரமே குனிந்துன்
அடிநேர் பணிந்து - மிகவாக.

ஊளநர கிகந்து பவமே இகழ்ந்துன்
ஊறவா லடைந்து - புவிவாழ
ஊனையே இரந்த அருளே குறைந்த
ஓருபாவி என்னில் - உருகாயோ?

ஓளிசீர் செறிந்து பவமே தொலைந்தின்
வுலகோர் சிறந்து - நிலையாக
ஊருவா கிவந்து குருசேறி நொந்த
ஊயர்தேவ மைந்த ! - உனைநாடும்.

ஏளியே னிழிந்து தெளிவே இழந்திவ்
இகமீ துலைந்து - பதறாதே
இதமாக உன்ற னருளாசி தந்திங்
கெனையாள இன்று - வருவாயே.

-------------

**Hymn 432: by J. W. B. Kumarakulasinghe**
432

நீலாம்பரி ரூபகதாளம்

### பல்லவி

ஆசை தந்த மனுவேலன் - என்னை
ஆடிமை கொள்ள வாரானோ ?

### அனுபல்லவி

மாசில் மெய்ஞ் ஞானப்பிர காசர் பரமகானான்
தேசர் அடர்ந்த பவ நாசரை இன்னுங் காணேன் ஆசை

### சரணங்கள்

அகில ஆசை செறிந்து செருக்குதே - வீண்
ஆடம்பரம் மனதைக் கருக்குதே
புகலுஞ் சிற்றின்பமுள் அருக்குதே - பொல்லாப்
புலையன் சாத்தானேவல் நெருக்குதே
துகிலாகுதே சிந்தை தினம் வேகுதே விந்தைச்
சேகதல ரட்சணய தீரனைக் காணேனே. ஆசை

சித்தந் திடமில்லாமல் அலையுதே - இந்தச்
செகவாழ்வை வாழ்வென்று மலையுதே
அத்தன் வராமற் காலந் துலையுதே - அவர்
அருகில் நில்லாமல் நிலைகுலையுதே
நித்தமும் அருந்தொல்லை நெஞ்சிற் தாங்குதல் வல்லை
உத்தம கர்த்தன் இன்னுமோடி வரக்காணேனே -ஆசை

.பாவிபடுந் துயரைப் பார்க்க - சொந்தப்
பத்தனாகி என்னை ஏற்க
ஆவி கலங்காமலே காக்க - என்னை
ஆட்கொண்டு மோட்சகரை சேர்க்க
மூவரொன்றான சோதி முதல்வனான என்னாத
தேவனைக் காதலத்துத் தேடியுங் காணேனே ஆசை

அன்னைமரிவயின் வந்தோன் -நரர்க்
காகச் சிலுவையில் நைந்தோன்
துன்னு மாவியின் பலந் தந்தோன் - கருணா
துரந்தரனாகச் சிறந்தோன்
துன்னை அடியார் நாளுஞ் சங்கீதத்தாற் புகழு
ஏன்னய மனுவேலை நாடிவரக்காக்காணே ஆசை

**Hymn 438: by K. C. Kumarakulasinghe**
உடன்படிக்கை

438
நாட்டை திசரதானம்

### பல்லவி

தேவ மைந்தா -- பெந்தேக்கோஸ்தின்
திரு வரந்தா

### ஆனுபல்லவி

பூவம நல் நீதி நியாயத்தீர்ப் பிவற்றைப்
புரித்துணர்த் தாவி பாலிப்பேன் என்றாயே தேவ

### சரணங்கள்

வானவனே -- நரர் பிணை யானவனே
ஞான சோதியா யிதயத் திருந் தென்னை
நூளுந தனிமைதீரத் தாளும்படிக் கின்னே தேவ
புன்மை நீங்க - புனிதா உன்
நன்மை தேங்க
உன்னையே எல்லாமென் றுன்னி உளம்பொங்க
உலகம் சிசாசம் உடலும் மடங்க தேவ
துஞ்சுகின்றேன் நின்னருட்குக்
கெஞ்சுகின்றேன்
அஞ்சவேண்டாம் அந்தரிக்க விடேன் என்று
ஐய நீ சொன்னதும் பொய்யாகுமோ ? இன்று தேவ

இன்பத்திலும் - தாங்கவொணாத
துன்பத்திலும்
அன்பன் நீ மாறாத நண்பனெனக் கண்டு
ஆற்றியடைந் துன்னைப் போற்றி செய்யத் தொண்டு தேவ

மாசழிக்க - எனக்குன்றன் தேசளிக்க
பாசமனைத்தும் பாழாகிப் பறந்திடப்
பற்றி பிடித் தென்னை முற்றிலும் ரட்சிக்க தேவ

## Publications and References

Zvelebil, Kamil V.(1994): Lexicon of Tamil literature. – Leiden New York: Koin Brill, 1994 Handbook of oriental studies Abt. 2. India Bd. 9) ISBN 90-04-10072--5

**Kumara Kulacinka Mutaliyar (1826-1884),** Christian author of Sri Lanka, author: Pativiratai vilacam.

**Tampaiya, Mankalanayakam (early 20),** Christian authoress, of Jaffna, Sri Lanka: Novel Norurikunta itayam (Crushed Heart, 1914), excellent social novel reflecting extremely well the way of life of Tamils in Sri Lanka, exemplified on the story of two women, Kanmani and Ponmani. Kaiimani, after many painful experiences, hearing the sermon of a Christian priest, embraces Christianity, and dies resigned and in peace. In contrast to her, Ponmani obtains the husband she has wished for, overcoming thereby evil schemes of Kanmani 's husband and his brother, and gives the impression of a strong, even heroic woman of iron will. In placing the two protagonists in contrast, T. has achieved great distinction. The novel unfolds against the background of Christian communities of Jaffna. 1930 issue of Jaffna magazine Utayatarakai publ. another of her novels, Ariyamalar (Rare Blossom).

**Barr Kumarakulasinghe, A (1911)** A Hand Book of Tamil Language and Grammar. Wesleyan Mission Press.

# பொற்பாத    துத்தியம்

ஆக்கியோன்

அரிநாயகம்  Barr  குமாரகுலசிங்கம்

---------------

என் அன்பார்ந்த மனைவியின்

ஞாபகார்த்தமாகப்

பிரகடனஞ் செய்யப்

பெற்றது.

# முகவுரை

பிரேதசேம ஆராதனைக்குச் சற்று முன்னும் பின்னும் நம் செவியை மந்தமாக்கி சித்தத்தை நிாப்பந்ததமாக்கும் மேளத் தின் கோரத்திலும் தாளத்தின் வீரத்திலும் மயங்கி மென்மே லும் அவற்றில் நாட்டமுற்று வாட்டமுறும் நம் கிறீஸ்தவா்கள் சிலருளா். அவா்கள் அவற்றை விட்டு இப்பாக்களையும் மற்றும் ஏற்று பாக்களையும் சமயோசிதப்படி உபயோகிக்க நம் போதகா்மாா் உற்சாகப்படுத்துவாா்களென்னும் நோக்கங்கொண்டு இவற்றை எழுதி வெளியிட்டோம். நம் நோக்கம் முற்றுறக் கருணாநிதியா கிய எம் பெருமான் கிருபை பாலிப்பாராபக.

அ. பா. குமாரகுலசிங்கம்
"அனுக்ரகபதி"
தெல்லிப்பழை 5-1-43

## 1 பொற்பாத துத்தியம்

(ஆனந்த மனோரஞ்சிதம்)

"வீடலால வாயிலாய்" என்ற மெட்டு

காயமான தோகனாக் காணமல்போற் கழியுமால்
மாயமான வாழ்வினில் மயங்கியாம் வதங்கமுன்
நேயமான நீதனின் நிழலிலே நிலைத்தவன்
சுாயலாக வேவாச் சாமியர சியீவையே

(பொற்சுண்ண மெட்டு)

1 சூரியன் கீழிங்கு தோன்றும்மெல்லாம்
சொப்பனம் போன்றவீன் மாயையன்றோ?
புாரினில் மாந்தா் பதிவாழ்வு
புரிதிமுன் காணும் பனிபோலும்
நுீரினில் நேருங் குமிழ்போலும்
நுிலைநிலா தென்பது நிச்சயமால்
சீருடன் நித்திய சீவனையே
தேடிப்பொற்ற பரதந் துதிப்பம் நாமே.

2 நாடக மாமிர்ந்த நானிலத்திலே
நாளை யிருப்ப தசாத்தியமே
வாடிடா நித்திய வாழ்வளிக்கும்
வள்ளலை யெங்கள் மனுவேலைத்
தேடகங் காணுஞ் செழுந்தேனைத்
துித்திக்கு மாநந்தத் தெள்ளமுதைப்
புாடியே நித்தமுங் கூடிக்கூடிப்
புணிந்துபொற் பாதந் துதிப்பம் நாமே

3 தேகம நித்தியம் வாழ்நாளோ
துீவிர மாய்க்கழிந் தோடிச்செல்லும்
சோகமே சூழுமித் தோடிச்சொல்லும்
துன்பமல் லாமமோ இன்பமில்லை
ஆகம ழிந்திடு மான்மா அழி
யுாதெனுஞ் சத்தியந் தானுணா்ந்தே

ஏகனை நாளிலும் பாடிப்பாடி
ஏத்திபொற் பாதந் துதிப்பம் நாமே

4 .புழுக்கள் கிருமிகள் வாழ்குரம்பை
பூவினுக் கேயிரை யாகுமதால்
ஆழுக்குறா தெம்திரு ஆவிதனை
ஆன்பனுக் குப்பிர திட்டைசெய்தே
இழுக்கின்றி முத்தி நெறிதவறா
தீசன் திருவடி நாம்வணங்கி
ஒழுக்கமு டனவன் போதம்நாடி
உயர்வம்பொற் பாதந் துதித்து நாமே

5. ஆய்யனின் சித்த மெதோ அதுவே
ஆகுமா மென்பது நிச்சயமே
மேய்யாமல் நலமதால் மேவுமென
விவிலிய நூல் சொன்ன விதியையெண்ணி
துய்யன் கிருபை துணைவேண்டித்
துயரக் கடலின் சுழல்தாண்டி
வையகம் பொய்யெனும் வாக்குணர்ந்து
வாழ்த்திப்பொற் பாதந் துதிப்பம் நாமே.

6. எருசலே மென்திரு ஆலயமே
என்று(ம்) நான் ஆசித்த வீடதன்றே
உரிழமயால் மாண உவகை பொங்கி
உலகை மறந்தே துதிபாடி
அருகி அவன்பால் அகமழ்ந்தே
ஆநந்த வின்பால் கதிசேரத்
துருவாய் வாமே யெனவிரந்து
தூழ்ந்துபொற் பாதந் துதிப்பம் நாமே.

7. எங்களுக் கோர்பதி சித்தஞசெய்ய
இன்பமொ டில்லிரும் விட்டெழுந்து
பங்பமில் லாதயைப் பண்பிலாடும்
பார்த்திபன் அற்புதப் பண்புணர்ந்தெம்
அங்கம் புழகித் தகங்கழிக்க
அன்பினால் ஆநந்தக் கண்பனிப்ப

மங்கள மிங்கிதம் பாடிப்பாடி
மன்னன்பொற் பாதந் துதிப்ப நாமே

8. மின்னொளி போன்றஅவ் விண்ணுலகில்
வேதனை யில்லை விசனமில்லை
துன்னுமோர் சிந்தனை துன்பமில்லை
சுற்றமென் பாசஞுசற் றேனுமில்லை
முன்னுசங் கீதம் மகிழச்சியுண்டு
முாட்சிமை யானநற் காட்சியுண்டு
முன்னன் மகிமைத் தரிசனம்நாடி
முகிழந்துபொற் பாதந் துதிப்பம் நாமே

9. துன்பந் துயரங் கறைபோக்கித்
தூயநல் ரட்சணய வழிகாட்டி
நுன்புற வென்றும் நடத்துமெங்கள்
நூயகன் பூவடி தஞசமென
ஆன்போ டிருகர முங்குவித்தே
ஆர்வமொ டெந்தலை யுங்குனிசந்தே
இன்புட னேயப முங்குழைந்தே
ஈசன்பொற் பாதந் துதிப்பம் நாமே

10. யேசுநம் மீட்பனின் இன்கதொனி
என்றும்நம் காதினில் கேட்கப்பெற்றோம்
பேசுமிப் பூமி பிசாசஞுசரவால்
பீடிக்கப் பட்டுநாம் வாடுவதில்
முாசிலா ரட்சகண் பாதந்தேடி
வுாஞுசையு டன்வழி முந்திக் கொண்டெம
ஈசனின் கீர்த்தியைப் பாடி
என் றும்பொற் பாதந் துதிப்பம் நாமே.

11. சத்தியம் பற்பல நன்குரைத்துச்
சாவினால் சீவனைத் தான்விலக்கி
நிதிதியந் தன்னை நிலைநிறுத்தி
நேரருள் நேர்வுற நீட்டிநல
ஊத்தம மெய்வழி யூட்டுமெங்கள்
ஊன்னத மன்னன் அருள்கோரிப்

புத்தியாய் நித்தமும் பாடிப்பாடி
புணிந்துபொற் பாதந் துதிப்பம நாமே

12 .அன்பிற் கிரியைகள் நீட நீட
அழிவுறு செய்கைகள் ஒட ஒட
இன்புறு நல்லறம் நீள நீள
இழிவுறு பாழ்வினை தாழத்தாழ
துன்புவு புன்செயல் ஆழ ஆழ
தூயநற் புண்ணியம் சூழச்சூழ
நுன்புற நாதனைப் பாடிப்பாடி
நூளும்பொற் பாதந் துதிப்பம நாமே.

## 2 பொதுப் பிரார்த்தனை

”வாழையடி”வாழை ” என்ற மெட்டு

இன்றுவரு மோஅழைப்பு நாளைக்கேதான் வருமோ
என்றுவரு மோசிலநாட் சென்றுவரு மோயாம்
ஒன்றுமறி யோமுலக மாயவலைப் பட்டே
உழலுகின்றோம் சுழலுகின்றோம் ஒருசுகமுங் காணோம்
வென்றுலக மாயதனை வெறுத்தேயாம் தள்ள
வேண்டுகின்றோம் நின்கிருபை வேண்டுகின்றோம் நாதா
உன்றனரும உசிதநிறை ஒலிவமலைத் தீஞ்சொல்
ஊட்டியருள் தினத்தருணை ஊற்றியருள் தேவே !

மறத்தனையோ பாவியெம்மை வையகத்தினல் பொல்லா
வாழ்க்கையுளோ மென்றினிய மனமிகழ்ந்து வெறுத்தே
எறிந்தனையோ நிதமடியோம் ஏங்கிமனம் நொந்தே
இடைகின்றோம் இருவிழிநீர் சொரின்றோம் எம்மைப்
பிறிந்தனையேல் யாதுசெய்வோம் பேதையர்கா மிங்கு
பெறவுமொரு துணையதில்லேம் பிழைபலவும் பொறுத்துன்
நிறைந்தவருட் திருக்காத்தை நீட்டியதி தயவாய்
நேயமுட னணைத்துனது நீடருளை வழங்கே.

## 3 ஆசிரிய விருத்தம்

கருணைபொறை யன்புநிறை கர்த்தாதி கர்த்தனே !
காருண்ய வள்ளலேயெம்
காயமோ மாயமாய்க் கழியுமென எண்ணாது
காலத்தைவீண் கழித்தோம்
தருணமிது நீயிதம் கிருபைசெய் தேநிதம்
தாளிணைகள் தந்துகாத்துத்
தாரணியின் வாழ்வினில் பூரண மிலையெனும்
சத்தியம் நன்குணர்த்தி
மரணவிருள் மூடியுயிா தாணிதனை விடுமுன்னர்
மன்னித்தெம் பவங்கள்யாவும்
மன்னுநல் அருள்பெய்து நின்னருந் தயைசெய்து
வாழ்விப்ப துன்பாம்காண்
திருவுருவெ டுத்திங்கு குருசினில் மரித்தெங்கள்
தீங்கெலாம் தீர்க்கவந்த
தேவாதி தேவனே சீவபரிபாலனே !
தேடரிய திவ்வியாவே !

## 4 தக்க இராகம்

தந்தைநீ யலையோ தமியமு முன்றன்
சரணமே தொழும்மகார் அலவோ?
ஏந்தைநீ யெங்கள் பிழைபொறுத் திதமாய்
இரங்கலுடன் கடனல வோயாம்
பந்தமீ திட்ட மெழுகுபோ லுள்ளம்
பதைபதைத் துழலுகின் றோமுன்
சிந்தைநைந் துரகித் திருப்பதம் தருவாய்
செல்லவமே யேசுநா யகனே !

"பித்தா பிறைசூடி" என்ற மெட்டு.

அன்பே மயமான அருள்நாதா ! மனுவேலா !
இன்பே நியேயல்லால் எமக்காரே துணைசீலா !
துன்பாம் பவஆழிச் சுழல்தன்னா லகம்நொதோம்
நுன்பாம் அருள்மாரி நலம்நாளும் சொரிவாயே.

## 5 இராகம்: மோகனம்.

1 இன்னுயிர்க் கொளியே துஞ்சும் ஏழைகள் கதியே அன்பால்
இந்நிலம் புரக்க வந்த ஏந்தலே ! இனியதேவே !
துன்னியே அந்திநேரம் தோன்றியிங் கிருளேமூட
மன்னுமோர் தஞ்சன்றி மாழ்கின்றோம் மருங்கில் நில்லே.

2 நிந்தனை தொல்லை வாதை நிகழ்த்திடு துன்பம் அச்சச்
சிந்தனை சாவின் கோரம் திகிற்குழி யதனின் வீமம்
வந்தெமை யணுகா நாளும் வரும்பல வெற்றி யேயால்
பந்தமில் பானே ! என்றும் பரிந்தெங்கள் மருங்கில் நில்லே.

3 .பூதலந் தன்னின் வாழக்கை பொய்யெனக் கண்டெ யேசு
நாதனாம் மீட்பன்பாதம் கண்ணியுடன் பாரந் தீரக்
காதலோ டுன்னை யின்று களிப்புடன் தத்தஞ் செய்யின்
தீதிலா தென்றும் சிறப்புற வாழ்வாய் தானே.

## 6 நட்ட இராகம்.

பொய்யாம் வாழ்வினையும் பொன்பூமி புகழினையும்
மெய்யார் சதமெனவே மிகாடி மெலிந்தலைதோம்
மையார் கண்செருகி மதிமங்கியாம வாடமுன்னர்
ஐயா ! நின்அருளாள் அடியேமுய்ய ஆண்டருளே.

பண் இந்தனம்

பரனே ! தயைவடி வே!மிகப் பணிந்தேத் தியெந்நாளும்
சரணே கதியென வேயுனைச் சார்ந்தே இருபொதும
கரமே யெழச்சிர மேதொழக் கசிந்தே மனம்நாட
வரமே யெமக்கருள் வாய்குரு மனுவேல் இயேசுதேவே.

## 7 மரித்தவர்க்காகப் பிரார்த்தனை

(திருத்தாண்டகம்)

1 அப்பா! நல் லருமனியே ! அன்பே ! அன்பின்
அருள்வடிவே ! அதிபொறையே ! அரசே ! ஆர்க்கும்
ஒப்பாரு மற்றிலங்கும ஒளியே ! வல்ல
உயர்கருணைப் பரம்பொருளே ! ஒன்றே ! இந்தத்
துபடபாருந் துயருலகின் துன்பம் நீத்துத்
துயிலுமுன்ற னடியினையுன் தூய பாதம்
இப்பாரில் ஒப்படைத்தோம் ஏற்றே யுன்றன்
இனியகுழாந் தொண்டருடன் இனைப்பால் சேரவே !

2 பன்னரிய துயர், வாதை, பாசந், தொல்லை
பலவுரளும் பூவுலகின் பந்தம் விட்டே
உன்னரிய பதந்தேடி உலகம் நீத்திங்
குயர்சயனஞ் செய்யஉனடியர னுக்குன்
மன்னுதிருக் கிருபைமிக வழங்கி நல்ல,
மகிமைபெறு பரகதியில் வலமொன் றீய
இன்னுயிரை ஒப்படைத்தோம் ஏற்றே யுன்றன்
இனியகுழாந் தொண்டருடன் இணைப்பாய் கோவே.

(தக்க இராகம்)

3. பார்க்குமெவ் விடமும் பரந்தருங் கிருபை
பணித்தருள் கருணைவா ரிதியே!
ஆர்க்குநல் லீவை அளிக்குமா ரமுதமே!
அண்ணலே! ஆருள்பொழி முகிலே!
நீர்க்குமிழ் நிகர்த்த நிலையிலா வாழ்வை
நீத்தநின் நேயனை யுன்றன்
தீர்க்கமாம் மகிமைத் தலத்தினிலே சேர்ப்பாய்
செல்வமே ! யேசு நாயகனே !

(அடியானை என்பதை அடியாளை என்றும், நேயனை என்பதை நேசியை என்றும் தருணத்திற்கேற்றபடி பாடிக்கொள்க)

## 8 தரவு கொச்சகக்கலிப்பா

தந்தைநீ, தாயுமுநீ, தாரமுநீ, தேவதேவ
மைந்தனுநீ, மீட்பனுநீ, மன்னனுநீ, மாசிலாத
சொந்தமுநீ, தோழனுநீ, துணைவனுநீ, சோரிசிந்தி
நைந்தவனு நீயலால்யார் நலிவதீர்த் தரளுவாரரே.

**தேற்றரவுவிருத்தம்** இராகம் : மோகனம்

பன்னருங் கருணை யோங்கும் பரமனே! யேசு நாத
மன்ன ! நின் அடியான் பிரிவால் மனமது தளர்ந்தே மிக்க
இன்னலுற் றேங்கி வாடும் ஏழைகள் தம்பா லெய்தி
மன்னநல் லாசீர் வாதம் வழங்குவாய் தேற்றி நீயே

முற்றிற்று.

## MY MOTHER!

Oh, woeful day ! when first my heart knew pain,
When first my Heavenly Father seemed to me

Too cruel and all prayers seemed in vain !
Omniscient Lord ! deep hast thou stabbed me
To deep, too deep for human skill to cure !

For hast  thou not in snatching her from me
Robbed one whose life was rich, serene and pure?
"Mother " - the source and fountain of my frame,
Has word rarer charm to filial ear?
Deprived of this great privilege on earth,
Of mother's love, her comfort and her cheer,
Must I my fate bewail - I fondly ask?
For dim and dismal glows the light of life
The cloud of misery now gathers thick,
Enshrouding youth in anguish, woe and strife!
Celestial Surgeon! Thou who hast known and seen
That pang in every fibre of my heart,
Must also know to clear this brooding gloom
And heal this wound and its painful smart !
Eternal Rock ! On Thee I pin my, faith -
To Thee I cling whilst troubles lash around :
Guide, guard, console ! Thy Holy promise keep
To fill a mother's place- Thy arms twine round
In crease care, though she has ceased through death.

BLOSSOM KUMARAKULASINGHE

# செபமாலை.

1. **நா**வழுத்துஞ் சொன்மலரோ நாளுதிக்கும் பொன்மலரோ
தேவையுனக் கின்னதென்று செப்பாய் பராபரமே.

2. **பூ**ட்டற்றுத் தேகமற்றுப் போகுமுன்னே நின்னருளைக்
காட்டத் தகாதோவென் கண்ணே பராபரமே.

-----தாயுமானவர்

3. **எ**ங்கும் பரவடிவாய் என்வடிவு நின்வடிவாய்
கங்குல்பக லின்றியுனைக் கண்டிருப்ப தெக்காலம்.

4. **நா**ன்நின்ற பாசமதில் நான்நின்று மாளாமல்
நீ நின்ற கோலமதில் நிறைவிநிற்ப தேக்காலம்.

-----பத்திரகிரியார்

## கட்டளைக் கலித்துறை.

கூருந் தயையொடு மானிடர் பாவங் குருசியின்பால்
தீரும் படிக்கருள் செய்தவென் மீட்பன் திருவடிக்குத்
தேருந் தமிழ்தனில் சொன்மலர் தேடித் தெரிந்தெடுத்தே
ஆருங் கமழ்செப மாலையான் சூட்டினன் ஆக்கிநன்றே.

அதிகாரம் 1.

## அந்திநேர அரிய கோரிக்கை.

தேவாரம்.

(திருத்தாண்டகம்)

1. பன் னுமேழ்பத் தாண்டென்னைப் பாது காத்துப்
பார்மீது சீராகப் பதித்தாய் யானுன்
உன்ன தநல் இரக்கமதை உளத்தில் எண்ணி
ஒவ்வாத என்மனதை உணர்ந்தே மாற்றி

உன்நலமே தோத்திரித்தெற் குளாபா கத்தை
உவப்புடனே கழித்தருள் உன்னை வேண்டி
என்னையுனக் கீந்தேன்யான் இனிய சித்தம்
எப்படியோ அப்படியே செய்வாய் தேவே !

"பால்நினைந்தூட"டும்" என்ற தேவார மெட்டு

(இராகம் மோகனம்)

2. இன்னமீர் ஆண்டோ ? இல்லையேல் ஒன்றோ
என்றுநின் திருவுள அழைப்போ
என்னயான் அறியேன் இனியஆ ரமுதே!
இருகரம் குவித்துளம் நெக்க
உன்னையான் வேண்டும் ஒருவரம் பொல்லா
உலகினை வெறுத்துயர் பதவி
தன்னையே அடையச் சாலநீ கனிந்து
தமியனைப் புரந்தருள் வாயெ.

3.புரந்தருள் வாய்நற் புண்ணயா யானுன்
புதல்வனென் தந்தைநீ யன்றோ?
இரந்துநின் பாதம் இருகையும் கூப்பி
என்றுமே தொழுதிலேன எனினும்
பரந்தநின் அன்பால் பாவியே னென்றன்
பவவினை யாவுமே அகற்றிக்
கரந்தனைத் தந்து கண்ணினுன் மணிபோல்
கடையனைக் காத்தருள் கண்ணே !

4.கண்ணினுன் மணியே ! கருணைமா கடலே !
கருதரும் கண்ணிய முதலாய்
விண்ணிடை விளங்கும விலையுயர் அன்பே !
மேதினி மீட்கவிங் குதித்த
அண்ணலே ! என்றன் அப்பனே ! ஏழை
அடியேன் ஆவிசோர்ந் திங்கு
மண்ணினுத் திரையாய் மடியுமுன் உன்றன்
வரந்தினம் வழங்குவாய் நீயே.

"வாழ்வது மாயம்" என்ற தேவார மெட்டு

5. மன்னாஉனை மறந்தேஇத மாயை தன்னில் மயங்கி
இன்னாமிக பன்னாள்புரிந் தேங்கிமனம் இடைந்தேன்
என்னாவிபோம் முன்னேயெனக் கிரங்கிக்கரம் ஈந்து
நின்பாவிழுத் தென்பாவங்கள் நீக்கயருள் நேசா !

6. அன்பேமய மான அருள் நாதா ! மனு வேலா !
இன்பே ! கதி நீயேயல்லால் அங்காருண்டு சீலா !
துன்பாம்பவ ஆழிச்சழற் சூதால்துயர் உற்றேன்
நன்பாம்அருள் மாரிநலம் நாளும்பொழி வாயமெ

7."மாதாஉனை மறந்தாலும்நான் மறவே"னென மொழிந்த
நாதா ! என்றன் தாதா ! உளம் நலியாதெனைத் தேற்றித்
தீதாம்பல என்பாவங்கள் தீர்த்தேகுண மாக்கிப்
பாதாம்புயம் தன்கீழெனைப் பரிவோடிருத்தையா !

"காதலாகிக் கசிந்து " என்ற தேவார மெட்டு

8.தூய காருண்ய சோதியே நின்கழல்
நேய மோடுயான் நித்தமு மேபற்ற
மேய திருவருள் மிக்கவும் நல்கியென்
குாயம வீயுமுன் கருணைசெய் தாள்வையே.

9.கருணை செய்தருங் காட்சிதந் தேயிந்தத்
தருணம் ஏழையைத் தாங்கிநல் அருள்செய்யின்
மரண மானது வாட்டுமோ நின்னெழிற்
சரனந் தாழுமுன் தனையனைத் தந்தையே !

10.தந்தை தாய்மார் சந்தையிற் கூட்டமே
சந்த தமேயுள தஞ்சம்நீ ஒருவருனே
மைந்தன் என்பவம் மன்னித்து மண்ணுள
பந்த மேவிடப் பாலிப்பை ஆகியே.

11ஆசி பெய்தெனை ஆண்டு ஆகண்டு நடத்தியென்
ஆசா பாசங்கள் அகற்றியே என்றென்றும்.

"பத்தனாய்ப் பாடமாட்டேன்" என்ற தேவார மெட்டு

16. சாவில்நேர் அச்சம் துன்பம் சஞ்சல மணுகா தென்றன்
ஆவிபோம் வேளை தன்னில் அன்பொடென் அருகில் நின்று
பூவியான் பதறா துள்ளம் பரிந்துநின் னாசி பெய்தென்
நூவினால் உன்னைப் போற்ற நல்குவாய் தேற்றம் தேவே !

கட்டளைக் கலித்துறை

17. பொன்னைப் பொருளைநற் பூமியைப் பொன்றாப் புகழினையா
உன்னைத் தரும்படி வேண்டிலன் நாதா! ஊலகைவிட்டேன்
என்னை எடுக்குமுன் நின்னாசி தந்திங் கிடைந்தெனுயிர்
இன்னற் படாதே எடுத்தருள் வாயென் இறையவனே !

வெண்பா

18.இன்றைக்கோ நாளைக்கோ என்றா எனக்கழைப்பென்
றொன்றும் அறியேன்யான் உத்தமனே ! - பொன்றுமுன்
என்பாவம் போக்கியே என்னை உளதாக்கி
உன்பாதம் சேர்ப்பாய் உகந்து

பராபரக்கண்ணி

19. ஆதி பரம்பொருளே ! அன்பில்விளை ஆரமுதே
சோதி வடிவே!யென் துணையே பராபரமே

20.மன்னுயிரைக் காக்க மனுரூபந் தானெடுத்த
இன்னுயிரே ! என்றன் இறையே ! பராபரமே

21.என்பெல்லாம் நெக்க இருகண்ணும் நீர்பனிப்ப
உன்பாதம் வந்தேன் உருகாய் பராபரமே.

22.உன்னடியை யானவிலகி ஓர்காலம் போக்கியதால்
என்னை மறந்தனையோ ? எந்தாய் ! பராபரமே

23. மன்னித்தே என்பிழைகள் மாற்றியெனை முற்றாயுடன்
சந்நிதியில் கூட்டத் தகாதோ ? பராபரமே.

24. கைபிடித்தே என்னைபக் கரைசேர்த்து நின்னருளால்
உய்யவைப்பாய் என்றன் ஒளியே ! பராபரமே.

25. என்னாவி தேகம்விட் டேகுமுன்னே சுத்திசெய்து
நின்னாசி யாலே நிரப்பாய் பராபரமே.

26. கூட்டைவிட் டென்னான்மா கொந்தளிக்க துன்பரம
வீட்டிலெனக் கோர்கதிதா வேந்தே ! பராபரமே

27. தன்னுயிரை மன்னுயிர்க்காய்த் தந்தவன்தன் தண்ணளிக்
என்னுயிருக் கோர்நல் இடந்தா பராபரமே

28. தொண்டருக்குத் தொண்டனாய்த் நொண்டுசெய்ய வேணும்
மண்டலத்தில் எற்கோர் வரந்தா பராபரமே.

29. தள்ளியெனை விட்டுவிடில் தத்தளிப்பேன் மெத்தவும்யான்
பிள்ளையுன தன்றோ பிழைதீர் பராபரமே

30. உடல்பொருள் என்னாவி ஒப்புவித்தே னென்னைத்
திடப்படத்தி நின்சரணம் சேர்ப்பாய பராபரமே்

# அதிகாரம் 11. 1

## பாவ மன்னிபபைப் பணிந்து வேண்டல்

தேவாரம்
(இராகம் : மோகனம்)

1. **தே**னினு மினிய தெள்ளமு தே! யென்
செல்வமே ! வெல்லைமா நகரில்
ஊனினை யெடுத்து உதித்தநல் ஒளியே !
ஒப்பிலா உயர்தயை வடிவே !
மூனது பொறித்த வலையினிற் சிக்கி
வதங்கிநின் றலைவது போல
யானுனை விட்டிங் கிகவலைப் பட்டே
இடைகின்றே னெனைப்புரந் தருளே.

2. **வ**ருந்தியே பாரஞ் சுமந்திடு வோரை
வருகவென் றழைத்தவென் இனிய
அருந்தயைக் குன்றே ! அன்புள மணியே!
அடியயேன் பாரமோ தாங்கேன்
போருந்து யையினில் புரண்டுமே உலகில்
புகலிட மிலாதலை கின்றேன்
நெரிந்துயான் அழியா தென்சுமை யேற்பாய்
நீதனே ! இயேசுநா யகனே !.

3 .**உ**ம்பரும் போற்றும் உயிர்க்குயிர்த் துணையே !
ஒதருங் கருணைவா ரிதியே
ஜம்பொறி காவாய் அடியேன் சிக்கி
அறிவிழ்ந் தனுதினம் பூவில்
கொம்பரில் லாத கொடிதனைப் போலக்
குழைந்துளம் தவித்துமெய் வாடி
வெம்புகின் ∴றென்நீ வினையணு காது
விலக்கியே ஆதரித் தருளே.

4. ஆடுமோர் கறங்கை அனையவென் மனமோ
அந்தரித் தலைந்திக மதனில்
வாடுமோர் வாட்டம் வல்லநீ யறிவாய்
வருந்தியான் அழிந்திடா தென்றன்
ஓடியே சுழலும் உளந்தனைக் கட்டி
உன்வச மாக்கிநீ ஆண்டு
நீடருள் சொரிந்தென் நினைவினில் உறைவாய்
நிமலனே ! இயேசுநா யகனே !

5. வாரியே என்னை மாயையாம் வாதை
மயக்கியே வாட்டிடா திங்கு
மாரியைக் கண்டு மலருமாம் பலேபோல்
மனமது புளகித மாகச்
சீரிய வுன்றன் திருவருள் மாரி
தினம்தினம் சிந்தையிற் பெய்து
நேரிய பாதை நிதமுநான் பற்ற
நேசனே ! அருள்புரி வாயெ.

6. கன்றினைத் தேடி சுனிந்ததி யழுது
கலங்குமோர் கறவையைப் போல
உன்றனை விட்டே உலகமா யையினில்
உழன்றுநின் றலைந்துமே நாளும்
என்துணை யறியா தேங்கியிங் கிருந்த
எளியனை யிரங்கிநீ யழைத்தாய்
இனறுனை யடைந்தேன் என்றுநீ யழைத்தாய்
இன்பனே ! இயேசுநா யகனே !

7. திருவுரு வெடுத்துச் செகந்தனை மீட்கச்
சிலுவையில் தொங்கிய மூதலே !
ஒருவன்நீ யல்லால் உள்ளுளி புரந்தேன்
உறுதுயர் தீர்ப்பவர் யாரே?
இருகரங் கூப்பி எனையுனக் கீந்துன்
இணையடி தொழுதுயான் வந்தேன்
திருவுளம் கசிந்துன் சேயெனைப் புரப்பாய்
செல்வமே! இயேசுநா யகனே!

8. வானவர் மண்ணோர் வணங்கிநாள் போற்றும்
வள்ளலே வழுத்தரும் அன்பே !
நானுனை யடைந்தேன் நலிவுறா தென்னை
நாளுநீ ஆதரித் தருளை
வானினின் றொழுகும் மழையெப் பெய்தென்
மனதினில் தங்கியென் பாவம்
கானலைக் கண்ட பனியது போலக்
பளைந்தருள் கருணைஆ ரமுதே !

9. உன்னருங் கருணை உணர்ந்திலாக் காலம்
உழன்றுயான் பவந்தனில் விழுந்தும்
அன்னையின் மிக்க அருந்தய வுடனே
அடியனை ஆதரித் தனித்த
பன்னரு முன்றன் பயன்தரும் தயவைப்
பதித்தென்றன் பவமன மதிலே
என்னரு கரங்கள் இனிதுமே கூப்பி
ஏத்தினேன் பதமளித் தருளே.

10. அண்ணலே ! யலையோ ? தமியனு முன்றன்
அன்னையே! ஆருணிறைந் திலங்கும்
புண்ணியா எளியேன் புன்மனந் தேங்கப்
புகலிடந் தந்தெனக் குரகி
எண்ணரு பவங்கள் யாவுமே யகற்றி
எழிலுற நின்னருள் அளித்துக்
கண்ணினுண் மணிபோல காத்துரட் சித்தேன்
கறைபல துடைத்தருள் நீயே !

11 தந்தைநீ யலையோ? துமியனு முன்றன்
சரணமே தொழுஞ் சுதன் அலனோ ?
எந்தை யென்றன் பிழைபொறுத் தன்பாய்
இரங்கலுடன் கடனல வோயான்
பந்தமீ திட்ட மெழுகுபோ லுள்ளம்
பதைபதைத் துழலுகின்ற றேனுன்
சிந்தைநைந் துரகித் திருப்பதந் தருவாய்
செல்வமே யேசுநா யகனே !

12. தஞ்சமென் றவர்கள் சஞ்சலம் நீக்கும்
தண்ணளி யேபொறை வடிவே!
துஞ்சுமுன் சுதன்யான் சோதனைக் காளாய்த்
துகளெனும் வலையிற் சிக்கி
விஞ்சிய பாவ வெறியினால் மயங்கி
விழுகின்றே யெனைப்புரந் தருள
நெஞ்சினில் கருணை நிறைந்துநீ கொள்வாய்
நேசனே! ஆரியநா யகனே!

---------------------

(திருத்தாண்டகம்)

1. சீர்பூத்த திருக்கருணைத் தேவே! என்றன்
தெள்ளமுதே தித்திக்கும் தேனே! பூகே!
பேர்பூத்த நின்பத்தைப் பிரிந்து பாவப்
பிணிபிடித்தே உழலுமிந்தப் பேதை என்றன்
கார்பூத்த உளமதனில் நீயே வைகக்
கருணைசெறி நின்னகத்தில் யானும் வைக
ஏர்பூத்த திருவருள்தந் தின்று மென்றும்
இன்பமுடன் இரங்கியருள் அனிய கோவே!

2. துன்பவிருட் சாகரத்தில் சுழிவாய்ப் பட்டுத்
துயரமுற்றே யழுந்துமிந்தத் துட்ட னேனுன்
இன்பவருட் திருக்கடலில் என்றும் நீந்தி
எழில்பெறுநன் மோட்சகதி இனிது சேரத்
நன்புடனென் பவப் பாரம் நயந்தே யேற்று
நாழுமெனக் குன்கிருபை நல்கித் தீய
என்புலனைக் கவர்ந்தருள்வாய் இறையே! நீதி
அலய்குபொறை தயைவடிவே இனிய தேவே!

3. பாவமெனும் அலைவாயிற் பட்டு நாளும்
பங்கமெனும் பாறைதனில் மோதி மோசம்
தாவிமதி மயங்கிநிதம் தயங்கு கின்றேன்
தாங்கியெனைக் கரைசேர்க்கத் தகாதோ? இந்தப்
பாவிபடுந் துயரனைத்தும் பார்த்தே ஒர்சொல்
பகரரிதோ? ஆணைக்கரிதோ? பரவி யேற்குன்
ஆவிபொழிந் திரங்கியருள் அன்பே! என்றன்
ஆரமுதே! அருட்கடலே! அரிய தேவே!

4. பித்தமதி பிடித்தமனக் குரங்கிங் கென்னைப்
பேசரியே மாயவலைக் குள்ளே மாட்டி
நித்தமுநின் நினைவினிலே நிலைக்கா தாட்டி
நிலைகுலைத்தே வாட்டுதலால் நிமலன் நீயே
மத்தமுறு மதைக்கட்டி, மாயை என்னும்
மறைதிரையை நீக்கிநின்பால் மனது செல்லச்
சித்தநிறை கொளல்வேண்டும் தேனே! ஞானம்
தேங்குபரி பூரணனே! தேவ தேவே!

5. அப்பா! நல் ஆரமுதே! அன்பே என்றன்
ஆருயிரே! அருட்கடலே! அகிலந் தன்னில்
ஒப்பாரு மிலாதிலங்கும் ஒளியே! தூய
உயர்தயவே! உன்மகிமை ஓரா தேழை
இப்பாரில் நிலைகுலைத்தே ஏங்கு கின்றேன்
என் பவந்தீர்த் தெனையாட்கொண்டேற்றே அன்பாய்
எப்போது தானணைப்பாய் எனக்கோர் வார்த்தை
இதயமது புளகமுற இயம்பு வாயே.

6. கருணையிலேன், பொறுமையிலேன், கனிதல் இல்லேன்
கசிந்தொருவர் நிலையதனைக் கண்டு சித்தம்
உருகியிலேன், உணச்சியிலேன் உண்மை இல்லேன்
உயர்பதவி நாடியுன்றன் ஒப்பில் பாதம்

6. அருகியிலேன் என்றெனைநீ அன்போ டின்றே
அணைத்தொருசொல் அறையாது விட்டா யேல்யான்
கருகிமனஞ் சோர்வேனென் கண்ணே! என்றன்
கண்மணியே! கருணைகொண்டு கடைக்கண்பரதே

7. வாவாவென் றெனைஅழைத்தாய் வந்தேன், இங்கு
வருத்தும்மா மாயைதனில் மயங்கி நின்றேன்
தேவா! நான் உன்னைமறந்தும் தேடி வந்தாய்
தேவிட்டாநின் அன்பு, பொறை, கருணை தம்மைப்
பாவாலும் நாவாலும் பாட நன்கு
படித்தறியேன் பண்ணறியேன் பதங்கள் காணேன்
மூவாகை விட்டுவிடேல், விடிலோ என்றும்
மூழ்குவேன் சஞ்சலத்தில் முற்றும் யானே.

8. அருள்தாவென் றிரந்தேனுன் அடியில் வீழ்ந்திங்
கடியேன்செய் கொடுபவத்தின் பேறாய் வந்த
இருள்நீங்க என்னகம்நீ என்றும் வைகில்
எளியேனை அனுதினமும் இங்கு வாட்டும்
மருள்நீங்கும், மனங்களிப்பேன் வரம்பெற்றுய்வேன்
வானுலகும் பூவுலகும் வாழ்த்துந் தூய
பொருளே நல் ஆசிதணய கொழியுந் தேனே!
புகலிடந் தந்தெனைப்புரக்க வருகுவாயே.

9. மூடமட நெஞ்சமது போன போக்கில்
முற்றாக நின்றலைந்து மூழ்கி நொந்து
பாடுபடு பாவிதனைக் கண்ணாற் பார்த்துப்
பகர்வரிய கருணைதனைப் பரிந்தே தந்து
வாடுகின்ற வாட்டமெல்லால் மாற்றி, உன்றன்
வசமாக்கித் துயரனைத்தும் அறவே போக்கி
நாடுமெனக் கருளீவாய் நாதா! அர்ய
நாயகனே! என்னினிய தேவே!

“பொன்னார் மேனியனே” என்ற தேவார மெட்டு

1. எந்தாய்! ஏன்அனையே! இறையோனே! ஏழின்மணியே!
நொந்தே என்பவத்தால் மனம்நொறுங்குண் டிடைந்தடியேன்
வந்தேன் நின்பதம்யான் பவம்மன்னித் தெனக்குன் அருள்
தந்த தரித்திடுவாய் சச்சிதானந்த தற்பரனே!

2. துன்பாம் என்செயலால் நிறைதூய வருளிரந்தே
இன்பாம் நின்பதத்தில் எனதின்னல் இடர்களிட்டேன்
அன்பாம் அருங்காத்தால் எனைஅணைத்துன் அருளீந்தே
என்பால் நித்தமும் இரங்கிக்கண் இட்டருளே.

“பித்தா பிறைசூடி” என்ற தேவார மெட்டு.

பரனே!தயை வடிவேமிகப் பணிந்தேத்தியெந் நாளும்
சரணேர்கதி யெனவேயுனைச் சார்தீங்கிரு போதும்
கரமேயெழச் சிரமேதொழக் சுகிந்தென்மனம் நாட
வரம்நீயெனக் கருள்வாய்குரு மனுவேல்பர தேவே!

அதிகாரம் II 2

பாவ மன்னிப்பைப் பணிந்து வேண்டல்.

சந்த விருத்தம்

உருவே! நிறைந்த ஒளியே! குனிந்த உறவே தெளிந்த தயவே!
அரியே னுகந்து பவநாள் புரிந்து னிருதாள் மறந்து புவியில்
திரியா துசிந்தை தனைநீ கவர்ந்து தினமே கனிந்து மிகவும்
பரிவா கவந்து னருணாள் சொரிந்து பவநோய் களைந்துமருவாய்

2. அடியே னிறக்க முன்நீ யெனக்கு  னருள்சீர் கொடுத்து நிதமும்
படுபா விபட்ட கொடுமா யைவிட்டுப் பல(ம்)மா வெறுக்க எழிலாளர்
அடியே யளித்து மிகவா தரித்து னருகே செழிக்க வருளி
படிமீ துனிட்ட வழியா னிலைக்க பரிவா யுனித்ய ளாமே

3. பவமே தொலைக்கப் பலநா துதிக்கப் படிமீ துவந்து பரிவால்
அவமா னமுற்றும் அதிபா டுபட்டும் அடியா ரைரட்சி அரசே!
நலமா னவுன்ற னருகே சம.்.தை நயமா கநத்தி யெளியேன்
தவமே புரிந்து னடிநேர் பணிந்து சகமீ திலங்க அருளே.

அனுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்

ஆலி துடித்திங் கயர்ந்தனனே!
அறிவுக் கடங்காசி செழுமணியே!
தாவும் பாவியென் துணையே!
தடுக்க முடியாக் கொடுமானம்
வாவென் றழைத்தி லித்தருணம்
வழியே தெனக்கு முத்திபெற
பாவி யிடைந்தே னிடுக்கணுற்றுன்
பாத மலரை அடைந்தேனே.

அடைந்தே னுன்றன் பதந்நாடி
அலைந்தேன் அடியேன் மிகவாடி
இடைந்தே தேடி யுனைநாடும்
எவர்க்குங் கருணை பொழிவாயே
உடைந்தே னுள்ளம் மிகத்தயங்கி
உருகி யென்மேல் மனதிரங்கி
கடந்தே செல்லப் பவக்கடலைக்
கருணை புரிவாய் என்குருவே!

குருவே குரசில் மாய்ந்தோனே!
கோனே! தெளிந்த செழுந்தேனே!
வுருவா யென்ற னுளத்துள்ளே
வுற்யேன் மகிழ்ந்து மனந்தேற
திருவாய் மலர்ந்தே எனக்கொரு சொல்
செப்பி யுன்றன் அபயகரம்
தருவாய் இன்றுன் னாசிதனைத்
தமியேன் மிகவும் வாடுகிறேன். (3)

வாடித் தயங்கு மடியார்க்கு
வழங்கு மரிய திருக்கருணை
தேடி யுன்றன் பதம் வீழும்
சிறிய னெனக்கும் ஈந்தருள்வாய்
நாடிப் பலியாய் வந்திங்கு
நார்க்காய்க் குகசில் மரித்தாயே
பாடித் துதிக்க யானறியேன்
பணிந்தேன் அரிய நாயகனே!

தின்னத் தின்னத் தெவிட்டாத
தேனே! இனிய செழும்பாகே!
இன்னு மின்னும் பலத்தில்வீழ்ந்
திடையா வண்ண மெனைக்காத்தென்
முன்னும் பின்னு மென்னுள்ளும்
முடுகி யென்னோ டிருப்பாயேல்
பன்னற் கரிய வரம்பெற்றிப்
படிமீ தடியேன் வாழ்வேனே.

(வேறு)

தந்தைபாற் சென்று சேயே தன்துயர் ஆற்றல் உண்டுன்
யிந்தைசேர் கருணை யாலெம் வினையறத் தீர்க்க வந்த
சுந்தரப் பரம தாதா! சோதியே! நீயே யல்லால்
எந்தையே! ஓரவ ரில்லை இறைஞ்சினேன் தஞ்சம் ஐயா!

ஏழிசீர்க்கழி நெடில் ஆசிரிய விருத்தம்

தாயினும் கருணை பூத்த தயைநிறை வடிவே!
துந்தையே! போல்லா
நாயினுங் கடையனாக நாட்கழித் துலைந்து
நலிவுறும் புல்லன்
ஆயினு முன்னே விட்டோ அகன்றிலேன் பாவி
யேன்னையுன் னரிய
சேயென வாவென் றாகி சிறந்திட வழங்காய்
சேல்வமே! தேனே!

(வேறு)

எந்தாய் குருவே! எனையான் பானே! எழிலார் நிதியே! நின்பாதம்
வந்தேன் அடியேன் இடையா தெனைநீ மருவாய் தினமாழ் துயர்தீர
நொந்தே அகநாள் இடைவார் தமக்கே நொசியா தருடான் தருவாய்நீ
தந்தாள் அருளே மருணேர் கெடலே தமியே னுனையா னடைந் தேனே

எண்சீர்க்கழி நெடில் ஆசிரிய விருத்தம்

"வாழையடிவாழை" என்ற மெட்டு

மறந்தனையோ பாவியென்னை வையகத்தில் பொல்லா
வாழ்க்கையுளான் என்றுமிக மனமிகழ்ந்து வெறுத்தே
எறிந்தனையோ எதுமறி யேன்நிதமும் ஏங்கி
இடைகின்றேன் இருவிழிநீர் சொரிகின்றேன் என்னைப்
பிறிந்தனையேல் யாதுசெய்வேன் பேதையன்யான் இங்கு
பெறவுமொரு துணையதில்லேன் பிழைபலவும் பொறுத்துன்
நிறைந்தவருள் திருக்கரத்தை நீட்டியதி தயவாய்
நேயமுடன் அணைத்துனது நீடருளை வழங்கே.

ஆன்னையிலும் கருணையுளாய் அன்புடையாய் அன்பால்
ஆகிலமிசை வந்துதித்தாய் அலைமிகப் பட்டே

உன்னுயிரை யென்னுர்க்காய் ஒப்படைத்தா யுன்றன்
ஒப்பரிய பெருந்தயவை யோர்ந்துமன முரகி
என்னுயிரை யுன்றனுக்கே இன்பமாய்த்தத் தஞ்செய்
திணையடிகள் தொழுதுநித மிகமதனில் வாழ
இன்னருளை மன முவந்தென் இதையமது களிக்க
என்றுகொலோ வருளுவையென் றியம்பியருள் கோளே

எண்சீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்

(“மாற்றறியாத செழும் பசும்பொன்னே”) என்ற மெட்டு

அத்தனே! ஆருணிறை அன்புள அரசே!
அண்ணலே! குருணையார் அரியகன் மணியே!
நித்தமு முலகினில் நிகழுஞ்சோ தனையால்
நினைமறந் தனுதினம் நெறிநெட்டிங் குழன்று
புத்தியற் றலைந்தடி யேனுனைப் பிரிந்தே
புவிமிசை யுளபல போக்கினில் திரிநடதேன்
சித்தமுற் றுதுபவச் சிறைதனில் அழுந்துஞ்
சிறியனை மீட்டருள் தேடரும் நிதியே!

தேற்றர வாழனே! சேல்வமே தேனே!
சேகமதில் அதிதுயர் படரவ முதலே!
காற்றினி லேயுறு கலமென நித்தான்
கறையெனுங் கடலதில் கதிகெட்டிங் கலைந்தேன்
போற்றிசெய் துன்னடி புகலிட மெனவே
புந்தியிற் கொளவருள் புரிந்திது தினநீ
ஆற்றிநின் றருளுவை அகமகிழ்ந் திடயான்
அண்டின னுணையென தரியநா யகனே!

இராகம் :குறிஞ்சி ஆதிதாளம்

“கல்லார்க்கும் கற்றவர்க்கும்” என்ற மெட்டு

வானோரும் மண்ணோரும் வாழ்த்துபரம் பொருளே!
வறியோரும் உடையோரும் வணங்குமருந் தெருளே!

தேனாரும் நன்மொழிகள் செப்பியசெந் தேனே!
செகத்தவர்கள் பலத்தினுக்காய்ச் சிலுவையதன் மீதே
தானாக எமை மீட்க தனைக்கொடுத்த் பலியே!
சாமிகிறின்த் தண்ணலே! நற்றயவுநிறை வடிவே!
நானாளும் பாடியுனை நமஸ்கரிக்க வரமே!
நல்கிடுவாய் என்னரிய நாயகனே பரமே!

பன்னிருசீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்

காற்றினுக் கெதிராக ஏற்றிவைத் தலைகின்ற
 கதிர்தராத் தீபம் போலும்
காலையும் மாலையுங் கறங்கு போலுஞ்சுழற்
 கதியிலா மனக்குரங்கு
சாற்றுவெம் மதமுற்றுத் தூற்றுமைம் புலனற்றுத்
 தகையெனுந் தருவிலேறி
தாகமாம் இலைகளாரம மோகமாங் கிளைகளைத்
 தாவியே பற்றியாங்கு
வீற்றிருந் தேதீய வினைபெனுங் கனிகளை
 வேட்கையோ டுண்டுநாளும்
வீந்துபோ காதுநின் பரந்தன்ய நாணதால்
 வினைகெடக் கட்டியாண்டு
தேற்றுநல் லருள்கொண்டு போற்றுதா ளமுதுண்டு
 சிறக்கவே வாழ்வருளுவாய்
தேவாதி தேவனே! சீவபரி பாலனே!
 தேடரிய திவ்ய குருவே!

1.காற்றாடி 2. பெருமை 3. ஆசை 4. உன்மத்தம்
5. இறந்து 6. பாதுத் தத்துவம் 7. கயிற்றால்

வெந்தணலின் மெழுகுபோல் நொந்துதீ வினையினால்
 விஞ்சுதயர் யாணுறாது
வேளையிது நீயிந்த வேழையைக் கைதூக்கி
 மேன்மேலு மன்புநாட்டி
சுந்தநமு முன்பதம் வந்தனை புரிந்துநின்
 துழைகருணை யெண்ணியெண்ணி

தலவிரத மென்றுமென் பவமக லவேசெய்து
தகுமிக்க காதலோடு
எந்தையென் றுன்னையான் சொந்தமாக கொண்டுமலர்
இணையடி விடாதுபற்றும்
இகமது கந்தங்கு மகமகிழ் வரம் பொங்க
என்னைநன் காண்டுஇ சோரி
சிந்தியே கொண்டவுன் ஐந்துகா யத்தினால்
செழிக்கவே வாழ்வருளுவாய்இ
தேவாதி தேவனே! சீவபரிபாலனே!
தேடரிய திவ்யகுருவே!

## அதிகாரம் 11-3

### பாவ மன்னிப்பைப் பணிந்து வேண்டல்
கலித்துறை

1. மாதா தனின்முகங் காணாது வாடும் மதலையைப்போல்
   நாதா! உனையின்னுங் காணாது வாடி நலிந்து சுற்றும்
   ஆதார மின்றி அயருகின் றேனெனக் கார்துணையுன்
   பாதார விந்தமென் சென்னியில் வைத்தருள் பாலிபடபையே.

2. எண்ணாத தெண்ணி இருவிழிநீரிறைத் தென்னியம்
   புண்ணாகி விட்ட தடியேற் கொருசொல் புகன்றுநிதம்
   தண்ணார் கருணை தனைப்பெய்தே என்துயர் தாங்கிகடைக்
   கண்ணால் ஒருதரம் நோக்கிடு வாய்கதி கண்டிடவே

3. மின்னல் தனைநிகர்த் துன்சிந்தை நெஞ்சினில் மின்னிமின்னி
   என்னகத் தேதோன்றி மேவிமறைகின்ற தெப்பொழுதும்
   உன்னை நினைந்துயான் முன்னிட் டொழுதி உயர்பதவி
   தன்னை யடையக் கிருபைசெய் வாயருந் தண்ணளியே!

4. அப்பா! கருணைக் கடலே உயிர்குயி ராந்துணையே!
   எப்போ தெடுத்திடச் சித்தமுண் டோஎளி யேனையுன்பால்
   இப்பாரில் யான்செய்த எண்ணற்ற பாவங்கள் மன்னித்தெனை
   அப்போ தெடுத்தருள் வாயமுந் தாவண்ண மாதரித்தே.

5. எண்ணற்ற பாவங்கள் செய்திட்ட பாதக னென்றெனை நீ
தண்டித் திடிலேன் புகலிட மெங்குண்டென் தற்பரனே!
கண்ணில் துளிகொளக் கைகூப்பி உள்ளம் கசிய நின்றேன்
என்னில் தயைகொண் டிரங்கிடு வாயென் இறையவனே!

6. நாளும் பவத்தில் உழன்றவ னென்றிந்த நானிலத்தில்
தாழும் படிக்கெனை வைத்திலைஇ யாதுமோர் தாழ்ச்சியின்றி
வாழும் படிக்கிங்கு வைத்தனை யானுனை வாழ்த்தியெந்த
நாளுந் துதிக்க வருள்புரி வாயென் நவமணியே!

7. தண்ணீர் தனைச்சற்றும் காணாது வாடிடும் தாமரைபோல்
மன்னா! மிகவும் வதங்குகின் றேனுள் மகிழ்ந்துரகி
மின்னே ரனைவன் பொய்யுடல் போமுனென் மீதிரங்கி
என்னே கலங்குகின் றாயெனகத் தேற்றிநன் கேற்றருளே.

8. அன்னை தனதருஞ் சேயை மறப்பினும் அற்பமெனும்
உன்னையோ யான்மற வேனென நீசொல் உறுதிமொழி
தன்னை நினைந்துயான் வந்தேனுன் பங்கில் தயவுடனே
என்னை அணைத்துன் னருளீநடது காப்பாய் இறைவனே!

கலிவெண்பா

பாலனே! தூயதிருப் பாதகனே! இம்மானு
வேலனே! வெல்லைநகர் விண்மணியே!-சாலச்
சிறகிழந்த ஈபோலச் சீர்குலைந்துள் வாடி
உறுகணுற் றேனைக் துலைந்த-சிறியேனைக்
கண்டுமனம் நொந்து கவலைகொண்டுள்ளூரகி
மண்டத்தின் மீது மரியுதரம் -- உண்டாகிப்
பாவியெனை மீட்கப் பலதுயரம் பட்டவா!
தாவுதுயர் நீக்கும்தயாபரா! பாவநிறை
காராரும் பூதலத்தின் கண்மணியே! பெம்மானே!
நேராரு மற்றவுயர் நித்தியனே! ஆரார்க்கும்
அன்பின் மழைபொழியும் ஆருந்த அம்புதமே!
இன்பம் வாக்ரமே ! இங்கிதமே! வன்பாதமக்!
கேட்டா வதீதமாய் எங்குமறை பூரணமாய்க்

கிட்டியுனம் பேசுங் கிறீஸ்தரசே! - திட்டமுடன்
மண்ணுக் கிரையாக மாய்த்துவிடும் இவ்வுடலை
எண்ணிச் சதமெனயான் ஏத்தினேன் - மண்ணுலக
இவ்வாழ்க்கை விட்டெனுயிர் இச்சமயம் பாறிவிடின்
எவ்வாழ்க்கை நேருமோ இயானறிவேன் -- இவ்வுலகில்
தாயற்ற சேய்போல்யான் தத்தனிக்க நீதியுண்டோ?
நாயொத்தே னேழையெனில் நாட்டமுறாய் - தாயொத்த
உன்கருணை யல்லால் உலகேதும் வைப்பதில்லை
என்குறைகள் போக்க இரக்கமுறாய் - நன்குறவே
இங்கமைத்த மானிடருள் என்போலோர் பாவியுண்டோ?
சங்கடங்கள் தீர்த்தென்னைத் தாங்கிடுவாய் - பங்கை
மறுதவித்த சீமோனில் மாதயவு கொண்டாய்
உறுதியற் றேன்மீ முருகாய் - சிறிதேனும்
ஏழை பாரியழலில் எற்றுண்டு வேதையுறப்
பீழைகொண்டுன் உள்ளம் பிணியுறுமே - நாளவம்நான்
போக்கித் திரியாதுன் பொற்புமிகு நல்லுறதி
வாக்கியத்தை என்றும் வழிபடவும் - தாக்குமூ
ஆசைக் சுழற்கடலில் ஆழாதும் ஆதரித்துன்
துாசனெனுஞ் சொன்மேன்மை தந்திடுவாய் - மாசணுகா
என்னொளியே! என்பரமெ! ஏன்னுயிர்க் காதலே!
என்னைநீ விட்டுவிடில் ஏங்குவனே - இந்நிலத்தில்
ஆரார் இருந்துமென்ன? அன்னைமுதல் யாருமென்ன?
ஏராரும் முத்தியவர் ஈவாரோ? - சீராரும்
நாதனே! என்னரிய நாயகனே! அன்புமிகும்
காதலுடன் என்றன் கரங்கூப்பி - மேதினியில்
தஞ்சம்நீ யென்றேயுன் தாழ்வீழ்ந்து தெண்டனிட்டுக்
கெஞ்சுகிறேன் என்செபத்தை கேள்.

## கொச்சகக்கலிப்பா

1. சிந்தைக் குகந்தவென்றன் தெள்ளமுதே ! நல்லரசே!
எந்தைநீ என்னைவிடில் என்செய்வே னென்றறியேன்
புந்தி தளருதே பொய்யுடல்சோர் வேறுதே
மைந்தனெனை யாண்டருளல் மன்னவ! நின் கடனாமே

2. ஏழைபடுந் துயரம் இன்னும்நீ கண்டிலையோ?
பிழைகொண்டெ னெஞ்சம் பெருந்துயருக் குள்ளாகும்
வேளையிது நீயென்னை விட்டுவிடில் கெட்டழிவேன்
கோழையெனக் கோர்சொல் கூறுதியுன் வாய்மலர்ந்தே.

3 கண்ணால் நீர்மல்கிக் கசிந்துகசிந் தேங்கிமனம்
புண்ணாக தென்றனுக்குப் பண்ணியா! நின்னினிய
தண்ணார் கருணைதனைத் தந்துநிதங் காத்தருளில்
மண், பெண், பொன்னினாசை மாண்புற விட்டுய்குவனே.

4 தேனே ! எனதினிய தேடற் கருறுசுவையே!
கோனோ உனில்தாகம் கொண்டுநிதம் வாடுகின்றேன்
தானாக வெனைக்கவர்ந்த தண்ணளியே! யுன்னையின்றி
நானோ விடுவதில்லை நண்புகொடு பற்றினனே.

5. வெல்லைப் பதிவந்த வித்தகனே! விண்மணியே!
எல்லையிலா அன்புநிறை என்னரிய நாயகனே!
அல்லல் படுமென்னை அன்போ டணைத்துனது
நல்லருளை நானுய்ய நல்கிடுவாய் நனகுகந்தே.

தரவு கொச்சகக்கலிப்பா

தந்தையுநீ, தாயுநீ, தாரமுநீ, தேவதேவ
மைந்தனுநீ, மீட்பனுநீ, மன்னனுநீ, மாசிலாத
சொந்தமுநீ, தோழனுநீ, துணைவனுநீ, சோரிசிந்தி
நைந்தவனும் நீயவாயால் நலிவுதீர்த் தாளுவாரே.

நிலைமண்டிலவாசிரியப்பா

அண்ணலே! கொடிய கண்ணக லுலகுக்
கரும்பெருங் கருணை சொரிந்திடு முதலே!
குரதியே சிந்தக் குரசினிலே தொங்கி
என்பவம் போக்க வன்துய ரடைந்த
உன்தயை தன்னை அன்புடனெண்ணி
இதமதி லென்றன் அகமது குழைய
இருகரங் கூப்பி விரிகணீர் மல்கி
உன்பதம் வீழ்ந்தேன் என்பவம் போக்கி
எனையாண் டருளி எனையுன தாக்கி
என்றுமுன் கருணை குன்றிட தணைகவே.

## அதிகாரம் **II-4**

## பாவமன்னிப்பைப் பணிந்து வேண்டல்.

திருப்புகழ் மெட்டு.

1. திருவருளொ டாதிளந்தை பலவினைகள் தீர்கவென்று
திகழ்மனதி லேநினைந்த - தகையாலே
தெரிவைமரி யாள்குழந்தை எனவுலகி லேபிறந்த
திருவுருவி ஏசுவென்னும் - மனுவேலா!
கருணைவடி னான்வுன்றன் சரணமது தேடிவந்த
கடையனெனை ஆளநொந்த - பெருமானே!
கவலைபல வாகவிஞ்சி இரவுபக லாகநைந்து
கதிதவறி யேயுலைந்து - திரியாது
பரிதியொளி மேவிநின்ற பனியகல்வு போலவென்றன்
பவமகல வேபுரிந்து - பரிவான
பதமலரி லேபடிந்து நிதமருளை யானடைந்து
பதவிபெற வோரருஞ்சொல் - உரையாயோ?
அரியகுண மேநிறைந்த பிரியமாக னாவனென்ற
அருமைபெற வேநினைந்த - அமைவாலே
அருனிலே தேவ! உன்றன் பெரியமன நேசமுன்னி
அமுதுகவி யாலியம்ப அருள்வாயே.

2. அளவே கடந்து னடியே பிரிந்த
ததனால் வருந்து - துயராலே
அகநாள் நெகிழ்ந்து சிரமே குனிந்துன்
அடிநேர் பணிந்து - மிகவாக
உனநா உகந்து பவமே இகழ்ந்துன்
உறவா லடைந்து - புவிவாழ
உனையே இரந்த அருளே குறைந்த
ஒருபா விஎன்னில் - உருகாயோ?
ஒளிசீர் செறிந்து பவமே தொலைந்தில்
உலகோர் சிறந்து - நிலையாக

உருவா சிவந்து குருசே றிநொந்த
உயர்தே வமைந்த! - உனைநாடும்
எளியே னிழிந்து தெனிவே இழந்தில்
இகமீ துலைந்து - பதறாதே
இதமா கஉன்ற னருளா சிதந்திங்
கெனையா னஇன்று -வருவாயே

3.
பாவம் தொடர்புவி மீதென் மனமது
பாயும் படிவிட - நினையாதே
பாசங் கெடவருள் நேசம் பெறவுயர்
பதந் தருகுவை - பரிவாக
பூவின் கொடுபவம் யாவும் சிரமிசை
பூணுந் தயையொடு - தரிதேவா
போதம் பெறுமன தோடும் உனையிரு
போதுந் துதிசொல - வருவாயே!
நாவும் எனதுடல் கூடும் மனதுடன்
நாளுந் தொழுதிடு - உருவோடும்
ஞானந் தயைபொறை நேயங் குணநடை
நானென் பதுகெடு நலனோடும்
மேவும் உயிருடன் யாவும் நினதினி
மேலென் பரமிலை எனநாடி
வீழுந் தமியனை நீடும் பரிவுள
மேளன் பொடுநித - மணைவாயே.

4.
பரந்த பூவின் பலவினை பாறிட வருபாலா!
புரிந்துன் ஆவி பலியென வேயொடு - பவநாசா!
வுருந்து யானுன் மலரடி நாள்தொழ வழுவாது
முகிழ்ந்து ஞானம் வரமருள் நீதா - வருவாயோ
புரிந்த பாவம் பலபல யானவை நிலையாது
புரிந்துன் ஆசி பொறையருள் வாயெனும் புலனாலே
இரந்து பாதம் இணையென் நாடுநின் எளியேனை
இசைந்து நேசம் தயையுட னாதரி - எசமானே!

5.
ஆதியே! முாதயை கோண்ட சீலா!
ஆதமார்மாமரி   தந்தமாலா!
சோதியா! நீதிது வங்குநீதா!
தோமிலாதேபொறை தங்குநாதா!
காதலாலேயெழு சிந்தையாலே
காயமோடாவிப டிம்சையாலே
வேதையோடபத மண்டினேனே
மேசியாவே! பர   எம்பிரானே!

6.
பாரின் மீதேயுள்   அன்பினாலே
பாவியீடேறுமொர்   சிந்தையாலே
சோரியேமேவிட நொந்ததாலே
சோகமேமேலிட நைந்த தேவா!
கோரினேனேபத நண்ணிநானே
கோதிலாதேபுவி தன்னின்மீதே
பாரமேதீரவு னண்பாதாலே
பாவிமேலாசிவ ழுங்கிடாயோ?

## அதிகாரம் -**III**
## கர்த்தன் திருவடி காண வாஞ்சித்தல்

(திருத்தாண்டகம்)

1. அருளானை, அருள்பழுத்த அன்புளானை
அறிவானை, அகத்தனை, அறிவுக்கெட்டாத
தெருளானைத், திகழ்கருணைச் சிந்தை யானைத்
தித்திக்குந் தேனானைச், சித்தமென்றும்
மருளானை, மகத்தானை, வயங்கா நின்ற
மதியானை, வரங்கொடுக்க வல்லான் தன்னை
இருளெறின் றுழலாதென் இடர்கள் தீர
பன்றோயான் மனங்குளிரக் காணு நானே.

2. ஒளியானை, ஒளிக்கொளிவாய் உலகிலெங்கும்
ஒளியானனை, என்றுமென்றன் உள்ளத்துள்ளே
அழியானை, அழிவில்லானை, அன்று மின்றும்
அனுதினமும் பிரியானைப், பிரிந்தோர் தம்மைக்
கழியானைக், களிம்பில்லானைக் கங்குல் பகலாய்க்
கனிவானைக், கடற்பெரிதுங் கருணை யானை,
எளியோனை யுயிர்மீட்ட இறைவன் தன்னை,
என்றோயான் மனங்குளிரக் காணு நானே,

3. வல்லானை வழுத்தரிய வரமே யெங்கும்
வழங்குகின்ற திருக்கருணை மனத்தினானை,
நல்லானை, நடுநீதி நயந்தே யாற்றும்
நற்கிருபை யுள்ளானை, ஞாலத்திந்தப்
பொல்லானைக் கவர்ந்தின்ம் புகட்டி னானைப்,
புண்ணியனைப் போதவாழ்க்வைப், பூர்வம், எல்லை
இல்லானை, யென்னருமை ஈசன் தன்னை,
என்றோயான் மனங்குரக் காணுநாளே.

4. மண்ணுலகோர் ஈடேற வாஞ்சை கொண்டு
மனுவுருவாய் வந்துலக பாரந் தாங்கித்
திண்ணமுடன் குருசினொந்து சிறை மீட்டென்னைத்
தினந்தினமு மாதரிக்குங் செல்வன் தன்னை,
நண்ணிவந்தே யென்னுளத்தை நாடி என்றும்
நன்மையது புகட்டியேசு நாதன் தன்னை
எண்ணரிய கருணைநிறை இன்பன் தன்னை
என்றோயான் மனங்குளிரக் காணு நாளே.

5. பன்னீரீர் ஆண்டதனில் மூன்று திங்கள்
படுக்கைதனில் நோய்வாய்ப்பட்டிருந்த வென்னை
நன்னலமே கருதியெமன்பால் நயந்து வந்து
நயிலரிய சுகமீந்த நாதன் தன்னை
இன்னுரவாய் என்னகத்தே இலங்குகின்ற
எகாந்தப் பெருவெளியை இகத்தி லென்றும்
என்னுயிருக் குயிரான் எம்மான் தன்னை
என்றோயான் மனங்குளிரக் காணு நாளே.

# அதிகாரம் IV

## திருவிருந்தாராதனைக்கேற்ற பாக்கள்
(இராகம் : மோகனம்)

1. ஆதியே! அன்பே! அப்பனே! இனிய
அன்னையே! ஆருணிறைந் திலங்குப்
சோதியே! எனக்காய்ச் சோரிநீ சிந்தித்
துயர்பல குருசினிற் பட்டாய்
நீதனா முயன்றன் நீள்தயை எண்ணி
நிதமுமென் மனமகிழ்ந் துன்றன்
பாதநேர் பணியப் பரிவுடன் கிருபை
பணித்தருள் கருணைவா ரிதியே!

2. பரிந்துநீ யெனக்காய்ப் பட்டுள பாட்டைப்
பாவியென் பணிவுடன் நினைத்தென்
இருள்மனம் நெக்க, இருவிழி இறைப்ப
இடைந்துன திணையடி வந்தேன்
குருசினில் வடிந்த குருதியா வென்றன்
குறைநிறை யுளந்தனைக் கழுவித்
திருவருள் அளித்தென் சிந்தையிற் கலப்பாய்
செல்வமே! யேசுநா யகனே!

3. காட்டியே யுன்னைக் கொடுக்கமுன் இரவு
கனிந்துநீ சீஷருக் கன்பாய்
ஊட்டிய மொழியை உணர்ந்துயா னடியேன்
ஒளிபெற உன்பதம் வந்தேன்
ஈட்டிநற் கிருபை என்பவம் போக்கி
இன்புடன் இருகாம் எடுத்தே
நீட்டிநின் சரணம் நிதமுநான் பற்ற
நிமலனே! அருள்புரி வாயே.

## "பத்தனாய்ப் பாடமாட்டேன்" என்ற மெட்டு

4. மன்னுயிர் தனைத்தே இந்த மகிதல மென்று மோங்க
இன்னலுற் றிடைந்த தேவே! இன்புள கருணை நாதா!
உன்னையான் தஞ்ச மென்றே ஒன்றியுன் னோடு வாழத்
துன்னியே வந்தே னென்றன் துகளெலாம் துடைப்பாய் தேவே.

5. பாவிநா னையா! பாவப்பாரமோ தாங்க மாட்டேன்
தாவியே அணைந்தே னென்றன் சஞ்சலம் தீர்ப்பாய், நித்தம்
வாவென அழைத்தா யின்று வந்தெனுன் சரணம் நாடி
தேவ! நீ யலாது வேறார் சிந்தைநைந் துருகு வாரே?

6. ஏழையான் செய்த பாவம் எண்ணில வானாலு முயன்றன்
நீழலில் தங்கு மெற்கு நின்தயையுண்டே யாமால்
கோழையான் கரங்கள் இரண்டும் கூப்பியே வந்தேன் ஐயா!
பிழைகள் படாதே யுய்யம் பிழைபல மன்னிப் பாயே.

7. சீர்பெறு செல்வம், மோட்சம், திகழ்ஒளி ஞானம் தந்து
நேர்பெறு பாதைகாட்டி நித்தமும் நடத்தித் தீமை
வேரற வெட்டி ஞான்றும் வியப்புறப் புரிவை யேயால்
பாரதில் நீயே தஞ்சம் பணிந்துணை அணைந்தேன் தேவே!

8. அய்யனே! அருமைநாதா! அப்பனே! எம்மை யாளும்
துய்யனே! பாவிகட்காய்த் துயரெலாம் பட்டா யுன்றன்
செய்யதான் கரம்வி லாவாற் சிவஷந்திய இரத்தங் கொண்டு
வையகம் உய்ய வைத்தாய் வழங்கிடக் னகம்மா றேதோ?

9. பாவமே தீர்க்க வென்று பரிந்துநீ சிந்தி இரக்கம்
ஆவியை விட்டாய் ஏற்காய், ஆனதால் யானின் றென்னைச்
சீவனின் குள்ள காலம் தியாகமே செய்தேன் பொல்லாப்
பாவியென் மனதி லென்றும் பண்புற உறைவாய் நீயே.

### அதிகாரம் V

குரு அபிஷேகத்திற்கேற்ற பாக்கள்.
(இராகம் : மோகனம்)

1. அன்னையே! எங்கள் அப்பனே! அகண்ட
அகிலமும் ஆண்டு காத்தருளும்

முன்னவா! இந்த மகிதலம் புரக்க

முனுவுரு வெடுத்திகம் வைகி
ஊன்னருஞ் சீஷர் உலகினிற் சென்றே
ஓளிநலம் வீசிடச் செய்தாய்
ஆன்னவர் போலுன் அடியனும் ஆற்ற
ஆவனுளம் அமைகுவாய் தேவே!

2. கத்தனே! ஆன்பார் கடவுளே! ஏன்றும்
கருணையோ டடியனைக் காத்து
நித்தமு மவனுன் நீழலில் தங்கி
நின்சுயி சேஷமே எங்கும்
சத்தியம்இ அறிவுஇ தாழ்மையன் பிரக்கம்
சகலநல் வரங்களும் வேண்டிப்
பத்தியாய்ப் பலர்க்கும் பரப்பவே ஆசி
பணித்தருள் கருணைவா ரிதியே!

(வேறு)

3. வேதனை படுத்தி யெம்மை விழுத்தியே யழுத்துந் தீய
சோதனைக் குட்ப டாதுன் தூயதாள் பணிந்து தாசன்
போதனை புரிந்து ஞான்றும் புகழுடன் வழுவா நல்ல
சாதனை யாலே காட்டத் கற்பரா! ஆருள்செய் வாயே

4. அன்புள அருமை நாதா! அண்ணலே அன்று நீயுன்
இன்புள சீஷர் தம்மேல் இதமுடன் ஆசிபெய்து
துன்புள உலகிற் சென்று துயர்பல போக்கச் செய்தாய்
நன்பொடுன் தொண்ட னுக்கும் நல்குவாய் வரங்கள் நீயே

# அதிகாரம் VI

## விவாக ஆராதனைக்கேற்ற பாக்கள்

### திருத்தாண்டகம்.

1. திருவாகித் திரிந்துவத்தி னொன்ற தாகித்
திருவெல்லைப் பதிவந்த செம்ம லாகிக்
குருவாகிக் கோமனாய்க் குமர னாகிக்
கோதின்றிக் குறைதீர்க்கக் குருசின் மாய்ந்த
உருவே! நுல் லொளிதருமிம் மானு வேலா!
உயர்கானான் மன்றற்ப்ர சன்னா! விங்கு
வருவாயின் றிம்மணத்தில் லந்தே ஆசி
வரந்தந்து வனமோங்க மகிழ்விப்பாயே.

2. அன்பே! யின்னாரமுதே! ஆறிவே! வுல்ல
அருமருந்தே! ஆதிசுவையே! ஆறிவா தீத
இன்பே! நல்லருட்கனியே! இனிய பாகே!
எங்குநிறை கருணைபொழி முகிலே! தேவே!
அன்பார்நின் மணமக்கள் ஆயள் எய்தி
அனுதினமுன் ஆசியுடன் செழித்தே யோங்கி
நன்பாரும் பாக்கியம்பெற் றூழி காலம்
ஞாலமிசை வாழவருள் நல்குவாயே.

### திருப்புகழ் மெட்டு

பூத லம்புகழ் ராசாதி ராசரும்
வூான தின்திரு வானாதி வரனரும்
பூவடங்கிய தேசாதி தேசரும்-தொழுஞான
போத னஞ்செறி தேவாதி தேவ! ஊன்
பாத மஞ்சலி சீராக வேபுரிந்
தோது தம்பதி யார்வாழ வேயருள் - சொரிவாயே
நீத முங்குண நீராரு நீர்மும்
நேச முந்தையை சீராரு ஞானமும்
வீசி டும்பர வேதா! வுனாசிகொண்டடியார்கள்

நேய மன்பொடு நேராக வேயிவன்
நீடி நன்குய நீவாழ்வை ஈகுவை
நீணி லந்துதி வாகான தேசிக் - மனுவேலே.

### தேவாரம்.

வாழ்க மணமகார் மங்கள மாயென்றும்
சூழ்க தேயொளி சோதியா யெங்கணும்
தாழ்க வெவ்வினை, தாரணி மீதினில்
வீழ்க நன்மழை வேந்தனு மோங்கவே.

## அதிகாரம்--VII

### ஆச்சிரம பிரதிஷ்டைக்கேற்ற பாக்கள்.

### திருத்தாண்டகம்.

1. பாருலகும் விண்ணுலகும் படைத்துக் காக்கும்
பரம்பொருளே ! தயாவடியே! பரனே! தூய்மை
யாருமெங்கள் ஆச்சிரம ஆலை யத்தை
அடியேம்நாம் உனக்களித்தோம் அன்பாய் நாதா!
கூருமுன்றன் கருணைகொண்டங் குழாத்திலே வைகிக்
குவலயத்திலே சுவிசேஷங் கூறநாங்கள்
தேருமரும் வரந்தந்து தினமுங் காத்தெம்
சிந்தைதனில் உறைந்தருள்வாய் திவ்ய தேவே!

2. பந்தமறு மெய்ஞ்ஞான நிலைநாம் பற்றிப்
பதிவிரத மொடுவறுமை பணிவு பேணிச்
சிந்தையது கொளநன்கு தெளிந்து தந்த
திவ்வியநின் ஆச்சிரமம் திகழ்ந்தே யோங்க
எந்தையே நல்லாசிவரம் என்றும் பெய்தே
எழிலுடனே தொண்டர்குழாம் இனிது வாழத்
தந்தருள்வாய் திருக்கருணை தனையே யென்றும்
தருணமிது கருணைநிறை தயாள தேவே!

( இராகம் : மோகனம் )

1. கருணையார் பரனே! கத்தனே! கிருபைக்
கடவுளே! காசினி புரக்கத்
திருவுரு வெடுத்துச் சிலுவையில் தொங்கிச்
சீவனை விடுத்ததெள் ளமுதே!
தருண்மீ தெங்கன் சந்நிதி வந்துன்
தாளிணை தந்துமே யுதவி
அருணலம் பொழிந்திவ் வாச்சிரம மத்தில்
அன்புட னுறைகுவாய் அரசே!

2. அன்றுநீ சீஷர்க் கன்புட னாவி
அருளியே அவருளம் வைகி,
என்றுமே இலங்க எழில்சுவி சேஷம்
இன்பொடு பரப்பிடச் செய்தாய்
இன்றுநின் னடியார் எங்குநின் சேவை
இதமுடன் புரியவே ஆசி
நன்றுநீ வழங்கி நவையெலாம் தீர்ப்பாய்
நாதனே! யேசுநா யகனே!

## அதிகாரம் - VII

### பொற்பாத துத்தியம்.
### ( ஆனந்த மனோரஞ்சிதம்.)

"வீடலால வாயிலாய்" என்ற மெட்டு

காயமான தோகனாக் காணல்போற் சுழியுமால்
மாயமான வாழ்வினில் மயங்கியாம் வதங்குமுன்
நேயமான நீதனின் நிழலிலே நிலைத்தவன்
சாயலாக வேவரச் சாமியா சியீவையே.

## பொற்சுண்ண மெட்டு

1. சூரியன் கீழிங்கு தோன்றுமெல்லாம்
சொப்பனம் போன்றவீண் மாயையன்றோர்
பாரிதனில் மாந்தர் பதிவாழ்வு
பரிதிமுன் காணும் பனிபோலும்
நீரினில் நேருங் குமிழ்போலும்
நிலைநிலா தென்பது நிச்சயமால்
சீருடன் நித்திய சீவனையே
தேடிப்பொற் பாதந் துதிப்பம் நாமே

2. நாடக மாமிந்த நானிலேத்தில்
நாளை பிருப்ப தசாத்தியமே
வாடியுடா நித்திய வாழ்வளிக்கும்
வள்ளலை யெங்கள் மனுவேலைத்
தேடகங் காணுஞ் செழுந்தேனைத்
தித்திக்கு மாநந்தத் தெள்ளமுதைப்
பாடியே நித்தமுங் கூடிக்கூடிப்
பணிந்துபொற் பாதந் துதிப்பம் நாமே.

3. கூடார வாசிகள் நாங்களெனக்
கொண்டெம் மனதிற் குறிப்பாக
நீடிய இன்பமும் ஆனந்தமும்
நிலவும்நல் நித்தியமாம் மோட்ச
வீடினைத் தேடி விரும்பியன்பாய்
விமலன் திருவருள் வேண்டிமிக
நாடியே நித்தமும் தேடித்தேடி
நாதன்பொற் பாதந் துதிப்பாம் நாமே.

4. தேகமே நித்தியம், வாழ்நாளோ
தீவிர மாய்க்கழிந் தோடிச்செல்லும்,
சோகமே சூழுமித் தொல்லுலகில்,
துன்பமல் லாமலோர் இன்பமில்லை,

ஆகம ழிந்திடு மான்மாஅழி
யாதெனுஞ் சத்தியந் தானுணர்ந்தே
ஏகனை நாளிலும் பாடிப்பாடி
ஏத்திப்பொற் பாதந் துதிப்போம் நாமே,

5. புழுக்கள் கிருமிகள் வாழ்குரம்பை
பூவினுக் கேயிரை யாகுமாதல்
ஆழுக்குறா தெம்திரு ஆவிதனை
ஆன்பனுக் குப்பிர திட்டைசெய்தே
இழுக்கின்றி முத்தி நெறி தவறா
தீசன் திருவடி நாம் வணங்கி,
ஒழுக்கமு டனவன் போதம்நாடி
உய்வம்பொற் பாதந் துதித்து நாமே.

6. அய்யனின் சித்தமெதோ அதுவே
ஆகுமா மென்பது நிச்சயமெ
மேய்யாய் நலமாதல் மேவுமென
விவிலிய நூல் சொன்ன விதியைஎண்ணி
துய்யன் கிருபை துணைவேண்டித்
துயரக் கடலின் சுழல்தாண்டி
வையகம் பொய்யெனும் வாக்குணர்ந்து
வாழ்த்திப்பொற் பாதந் துதிப்பம் நாமே.

7. எருசலே மென்திரு ஆலயமே
என்று(ம்) நான் ஆசித்த வீடதன்றே
உரிமையால் மரண உவகை பொங்கி
உலகை மறந்தே துதிபாடி
அருகி அவன்பால் அகமகிழ்ந்தே
ஆநந்த வின்பக் கதிரேசத்
தருவாய் வரமே யெனவிரந்து
தாழ்ந்துபொற் பாதந துதிப்பம் நாமே.

8. எங்களுக் கோர்பதி சித்தஞ்செய்ய
இன்பமொ டிவ்விதம் விட்டெழுந்து

பங்கமில் லான்தயைப் பண்பிலாடும்
பார்த்திபன் அற்புதப் பண்புணர்ந்தெம்
அங்கம் புழகித் தகங்கழிக்க,
அன்பினால் ஆநந்தக் கண்பனிப்ப,
மங்கள மிங்கிதம் பாடிப்பாடி,
மன்னன்பொற் பாதந் துதிப்போம் நாமே,

9. மின்னொளி போன்றஅவ் விண்ணுலகில்
வேதனை யில்லை, விசனமில்லை,
துன்னுமோர் சிந்தனை, துன்பமில்லை,
சுற்றமென் பாசஞ்சற் றேனுமில்லை,
மன்னுசங் கீதம், மகிழ்ச்சியுண்டு,
மாட்சிமை யானநற் காட்சியுண்டு,
மன்னன் மகிமைத் தரிசனம்நாடி
மகிழ்ந்துபொற் பாதந் துதிப்பம் நாமே.

10. துன்பந் துயரங் கறைபோக்கித்
தூயநல் ரட்சண்ய வழிகாட்டி,
நன்புற வென்றும் நடத்துமெங்கள்
நாயகன் பூவடி தஞ்சமென,
அன்போ டிருகர முங்குவித்தே,
ஆர்வமொ டெந்தலை யுங்குனிந்தே,
இன்புட னேயக முங்குழைந்தே
ஈசன்பொற் பாதந் துதிப்பம் நாமே.

11. யேசுநம் மீட்பனின் இன்பதொனி
என்றும்நம் காதினில் கேட்கப்பெற்றோம்
பேசுமிப் பூமி, பிசாசஞ்சாவால்
பிடிக்கப் பட்டுநாம் வாடுவதில்,
மாசிலா ரட்சகன் பாதந்தேடி
வாஞ்சையு டன்வழி முந்திக்கொண்டெம்
ஈசனின் கீர்த்தியைப் பாடிப்பாடி
என்றும்பொற் பாதந் துதிப்பம் நாமே.

12. சத்தியம் பற்பல நன்குரைத்துச்
சாவினால் சிவனைத் தான்விலக்கி,
நித்தியந் தன்னை நிலைநிறுத்தி,
நேரருள் நித்தமும் நீட்டிநல
உத்தம மெய்வழி யூட்டுமெங்கள்
உன்னத மன்னன் அருள்கோரிப்
பத்தியாய் நித்தமும் பாடிப்பாடி
பணிந்துபொற் பாதந் துதிப்பம் நாமே.

13. ஆதியு மந்தமு மில்லாதான்
அன்பு பொறையருள் உள்ளான்மெய்ச்
சோதியா மெங்கள் பெருமானின்
தூய திருச்சுதன் யேசுகுரு
நாதனை ரட்சக மூர்த்திதனை,
நாளும்நற் பத்தியாய்ப் பாடிக்கொண்டு,
தீதற நன்மை செழிக்கவென்றும்
தேடிப்பொற் பாதந் துதிப்பம் நாமே.

14. வானகத் தாரிகை பாடப்பாட,
வையகத் தாரமகிழ்ந் தாடஆட,
ஆனபல் சாத்திரி மார்க்கன்தேட
ஆவினொர் கொட்டிலி லேயுதித்த,
ஞான குருவெங்கள் யேசுநாதன்,
நானில மென்றுஞ் செழித்தோங்க,
ஈனரை நாடியே எய்தினனென்
றெண்ணிப்பொற் பாதந் துதிப்பம் நாமே.

15. மானிடர் தம்பவம் போக்கவன்னை
மாமரி யாள்வயின் உற்பவித்தே,
ஆனடை கொட்டிலி லேபிறந்திங்
காற்றரும் வானத பலவடைந்து,
வானஞ்சென் றண்ணல் வலப்பாகம்
வாழ்கென் றருள்தர சீற்றிருக்கும்,
கோனவன் அன்பினைப் பாடிப்பாடி,
கூடிப்பொற் பாதந் துதிப்பம் நாமே.

16. அன்பிற் கிரியைகள் நீட, நீட,
அழிவுறு செய்கைநன் ஓட, ஓட,
இன்புறு நல்லறம் நீள, நீள,
இழிவுறு பாழ்வினை தாழத்தாழ,
துன்புறு புன்செயல் ஆழ, ஆழ,
தூயநற் புண்ணியம் சூழச்சூழ,
நன்புறு நாதனைப் பாடிப்பாடி,
நாளும்பொற் பாதந் துதிப்பம் நாமே.

## பொதுப் பிரார்த்தனை.

### "வாழையடி வாழை" என்ற மெட்டு

இன்றுவரு மோஅழைப்பு நாளைக்கே வருமோ
என்றுவரு மோசிலநாட் சென்றுரு மோயாம்
ஒன்றுமறி யோமுலக மாயவலைப் பட்டே
உழலுகின்றோம் சுழலுகின்றோம் ஒருசுகமுங் காணோம்
வென்றுலக மாயைதனை வெறுத்தேயாம் தள்ள
வேண்டுகின்றோம் நின்கிருபை வேண்டுகின்றோம் நாதா!
உன்றனரும் உசிதநிறை ஒலிவமலைத் தீஞ்சொல்
ஊட்டியருள் திருக்கருணை ஊற்றியருள் தேவே!

## ஆசிரிய விருத்தம்

கருணைபொறை யன்புநிறை கர்த்தாதி கர்த்தனே!
காருண்ய வள்ளலேயெம்
காயமோ மாயமாய்க் கழியுமென எண்ணாது
காலத்தைவீண் கழித்தோம்
தருணமிது நீயிதம் கிருபைசெய் தேநிதம்
தாளிணைகள் தந்துகாத்துத்
தாரணியின் வாழ்வினில் பூரணமிலையெனும்
சத்தியம் நன்குணர்த்தி

மரணவிருள் மூடியுயிர் தரணிதனை விடுமுன்னர்
மன்னித்தெம் பவங்கள்யாவும்
மன்னுநல் அருள்பெய்து நின்னருந் தயைசெய்து
வாழ்விப்ப துன்பரம்காண்
திருவுருவெ டுத்திங்கு குருசினில் மரித்தெங்கள்
தீங்கெலாம் தீர்க்கவந்த
தேவாதி தேவனே! சிவபரி பாலனே!
தேடரிய திவ்யகுருவே!

## மரித்தவர்க்காகப் பிரார்த்தனை.
## திருத்தாண்டகம்.

1. அப்பா! நல் லருமணியே! அன்பே! அன்பின்
அருள்வடிவே! அதிபொறையே! அரசே! பூவின்
ஒப்பாரு மிலாதி லங்கும் ஒளியே வல்ல
உயர்கருணைப் பரம்பொருளே! ஒன்றே! இந்தத்
துப்பாருந் துயருலகின் துன்பம் நீத்துத்
துயிலுமுன்ற யடியனையுன் தூய பாதம்
இப்பாரில் ஒப்படைத்தோம் ஏற்றே யுன்றன்
இனியகுழாந் தொண்டருடன் இணைப்பாய் கோவே?

2. பன்னரிய துயர், வாதை, பாசந், தொல்லை
பலபுரளும் பூவுலகின் பந்தம் விட்டே
உன்னரிய பதந்தேடி உலகம் நீத்திங்
குயர்சயனஞ் செய்யுமுன்ற னடியா னுக்குள்
மன்னுதிருக் கிருபைமிக வழங்கி நல்ல,
மகிமைபெறு பரகதியில் வலமொன் றீய
இன்னுயிரை ஒப்படைத்தோம் ஏற்றே யுன்றன்
இனியகுழாந் தொண்டருடன் இணைப்பாய் கோவே?

(இராகம் : மோகனம்)

பார்க்குமெவ் விடமும் பரந்தருங் கிருபை
பணித்தருள் கருணைவா ரிதியே!
ஆர்க்குநல் லீவை அளிக்குமா ரமுதே!
அண்ணலே! அருள்பொழி முகிலே!
நீர்க்குமிழ் நிகர்த்த நிலையிலா வாழ்வை
நீத்தநின் நேயனை யுன்றன்
தீர்க்கமாம் மகிமைத் தலத்தினில் சேர்ப்பாய்
செல்வமே! யேசு நாயனே!

(அடியானை என்பதை அடியாளை என்றும், நேயனை வன்பதை நேசியை என்றும் தருணத்திற்குகேற்றபடி பாடிக்கொள்)

## தேற்றரவு விருத்தம்

புன்னருங் கருணை யோங்கும் பரமனே! யேசு நாத
முன்ன! நின் அடியான் பிரிவால் மனமது தளர்ந்தே மிக்க
இன்னலுற் றேங்கி வாடும் ஏழைகள் தம்பா லெய்தி
மன்னுநல் லாசீர் வாதம் வழங்குவாய் தேற்றி நீயே.

# நல்வழி - நவமணி.

## வெண்பா.

1. அன்பும், அறனும், நல் ஆதரவும், ஆரறிவும்
இன்புறவே யுன்னில் இலங்குமெல் - நன்புறவே
சீலமுட னென்றுஞ் செழித்தோங்கி வாழ்குவைநீ
ஞாலமிசை நன்மையிவை நாடு.

2. இரக்கம், மெய், ஈகை, எதார்த்த(ம்)ஏ கற்நன்(பு)
உருக்கம், நல் ஊக்கம், ஒழுக்கம் - புரக்கவே
என்றும் வரனெய்தி இன்பமுடன் வாழ்குவைநீ
நன்றிவைகள் நாளுமென நாடு.

3. சாந்தம் தயை, தூய்மை, தாழ்மை, சமாதானம்,
மாந்தர்க்கு கணிகலமே வாழ்ந்துய்ய, - பாந்தமுடன்
ஆளுமெங்கள் ஆதிபரன் ஆரருளை நீவேண்டி
நாளுமிவை நன்மையென நாடு

4. நிதாந்தம், நேர், நீதி, நெறி, நேர்மை நான்கும்
யதார்த்தமொடு கைக்கொண்ட யானின் - உதாரமாய்
மென்மேலு மாசிபெற்று மேன்மையுற்று வாழ்குவைநீ
நன்மையிவை நாளுமென நாடு,

5. அவனன்றி யோரனும் ஆடா தெனுஞ்சொல்
இவன்கண்ட வுண்மைஇ இதனால் - அவனையே
அந்திசந்தி தாள்பணிந்தே ஆர்வமுட னேநோக்கி
வந்தித் தனுதினமும் வாழ்த்து.

6. தன்னுயிரை மன்னுயிர்காய்த் தந்தவனை, யுன்னருமை
மன்னவனை யென்றும் வணங்கிவரின் - பன்னரிய
அல்லல்போம், தொல்லைபோம், ஆறாத் துயரம்போம்,
வல்வினையும் போமே மறைந்து.

7. பாருலகிற் சோதனைகள் பற்பலவே யாதலினால்
சீரருளை நீவேண்டித் தெய்வத்தை - நேராகத்
தோத்திரித்துப் போற்றிவரின் சோதனைகளால் விலக்கிக்
காத்தருள்வான் கர்த்தனவன் காண்.

8. செல்வம்வந் துற்றிடினும் சீராக வாழ்த்திடினும்
அல்லலொடு தொல்லையுனை அண்டிடினும் - வல்லபான்
கற்பனைகள் மீறாது காதலுடன் நீவணங்கி
நிற்பதே நல்ல நிலை.

9. அய்யா உனது சித்தம் ஆகட்டு மென்றன்பால்
மெய்யா யவனருளை வேண்டிநிற்பின் - துய்யனவன்
எல்லாமுன் நன்மைக்கே இட்டருள்வன் நிச்சயமே
வல்லான் மலரடியை வாழ்த்து.

முற்றிற்று.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

இச்சமயம் பினாங்பட்டினவாசரும், என்னிதய விகவாசரும், இயல்இசைத்தமிழிற் பரகாசரும் ஆகிய எஞ்சினீர், உவில்லியம் முத்தையா அண்டவூட் என்பார் என்பாக்களைக் கண்ணுற்று எனக்கெழுதி அனுப்பிய

## மதிப்புரை

### கட்டளைக் கலித்துறை

தேவாரப் பண்ணுந் திருப்புகழ்ச் சந்தமுந் தேர்ந்தெடுத்து
பூவார் மென்ன பொலியசெப மாலை புனைந்தளித்தான்
நாவாணர் மெச்சிய நாயக னாகுமென் நண்பனவன்
பாவணார் போற்றுங் குமார குலசிங்க பாவனனே.

யாரு நின்மனே ரஞ்சிதங் கண்டு மனமகிழ்ந்தேன்
ஓபா துவந்ததை யோதிடு வாருக் குலகமுண்ட
மாயாதி பொய்மை மயக்கமெல் லாமற்று வைபமெல்லா
நீயா ரிபா ரெனும்பரிச் சேதமு நிங்குமன்றே. (பக்கம்-32-39)

நேரிசைவெண்பா

மண்பா னிதசேர் வழுக்கொறுத்து வாழ்வு கொண்டு
விண்பான் மனனோக்க வேண்டுவையேல் - நண்பாய்
குமார குலசிங்க குரப்புலவன் சொன்ன
நமாயவசி நல்வழியை நாடு. (பக்கம் 32-40)

## Letter from ABK to Wife 10th August 1942

தெல்லிப்பழை
10.8.42

பட்சமுள்ள சகோதரி

அறிவது நீங்கள் எழுதிய கடிதம் வாசித்தோம் .இம்மாசம் 28ந் திகதிக்குப்பின் மற்ற மாசம் 10ந் திகதி வரையிலும் நல்ல நாட்கள் ஒன்றோனுமில்லாததால் 28ந் திகதியே விவாகத்தை நிறைவேற்றவேனும். உங்கள் மகளுக்கும் வசதியாயிருக்கும்.10ந் திகதிக்குப்பின் ஆனால் எனது வெளியூரில் இருக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் வரவசதிவராது. சுகயீனமாருக்கும் மகளுக்கும் பெரும் வசதியீனமாருக்கும் மகன் இவ்விடம் வந்ததாக எழுதியிருந்தார்.உங்கள் மகன் கொண்டு வரவேண்டிய கடறையை நாங்கள் எடுத்து வைத்தால் நல்லதென்று நீங்கள் சொல்லியதாக கேள்விப் பட்டதாகவும் எழுதிருந்தார் அப்படிச் செய்வது உங்களுக்கு விருப்பமானால் நாங்கள் சந்தோசமாக செய்வோம்.

கூறை உடுக்க வேண்டிய விஷயத்தில் முதன்முதலாக வெளியே உடுத்துக் கோவிலுக்குப் போவதுதான் மரியாதையும் பரிசுத்தமாயிருக்கும் என்று எனது மக்கள் சொல்லுகிறார்கள். முதலாம் இரண்டாம் கூறைகள் என்ன விலைக்கு எடுக்க வேணுமென்றும் beil ,wealth எடுக்கிறதோ என்பது பற்றி எழுதவும். 15 ந் திகதி மட்டில் நீங்கள் வந்தால் நல்லது துயவு பண்ணி இனித்து ....செய்யாதேயுங்கள்

இப்படிக்கு
சகோதரி
குமாரகுலசிங்கம்

## Letter from ABK to Wife 11th August 1942

தெல்லிப்பழை
11.8.42

பட்சமுள்ள சகோதரி அறிவது நேற்று நானெழுதிய கடிதம் பெற்றிருப்பீர்களென நம்புகிறேன் 28ந் திகதியையே நாங்கள் குறித்திருக்கிறோம்.

உங்கள் மகன் தற்போது அளவெட்டிகுப் போதகராக வந்திருப்பதால் உங்கள் மகளின் விவாகத்தை அளவெட்டித்தேவாலயத்தில் நிறை வேற்றுவதே உங்களுக்கும் எங்களுக்கும் மிக வசதியாக இருக்கும் இப்போ தெல்லிப்பழைக்குப் போதகராக வந்திருக்கும் ஆணலட் போதகர் அளவெட்டிப் போதகராகவிருந்த பொழுது அங்கு அவருக்கு மிஷன் கொடுத்திருந்த வீட்டில் அனேக திருத்தய்கள் செய்திருக்கிறார். ஆவ்வீட்டில் இருபெரும் படுக்கை அறைகளும் இரு சிறு அறைகளும் குசினியுமுண்டு. அவ்வீடு மிக வசதியாயிருக்கும்
தேவாலயத்திற்குச் சேர்ந்த வீட்டுக்குகிட்ட இன்னொரு வீடு தேவையானால் எடுக்கலாமாம். பலகாரியங்கலேயும் யோசிக்கும் பொழுது உங்கள் இளய மகளின் வீட்டில் வைத்தே விவாகத்தை செய்வது மேன்மையும் உத்தமமாயிருக்கும் ஆணல்ட் போதகர் எங்கள் சொந்த இலாகவிருப்பதால் அளவெட்டியில் எவ்வித உதவி உதவிதேவையோ அவ்வித உதவி உங்கள் மகனுக்குச் செய்யும்படிக்க நாங்கள் சொல்லிவிடலாம்.
வட்டுக்கோட்டையில் வைத்து விவாகம் செய்வது இதைப்போல் வசதியிராது.
அளவெட்டியில் செய்யத்தீர்மானித்துக் கொண்டால் மொத்தத்தில் செய்யவேண்டிய மாற்றத்தை உடனேயே செய்து அவ்

நாளொரு வண்ணம் பொழுதொருமேனியாய் எழும்புவதால்
நீங்கள் வாங்க வேண்டியது எதுவோ அதைச் சீக்கரம் வாங்குவதே புத்தி.
சென்றகிழமை துலாம் 3  2ரூபா விற்ற பாக்கு இக்கிழமை 1ரூபா மறுகிழமை என்னவாய் முடியுமோ அறியோம. நாங்கள் கூறை முதலிலே சென்ற கிழமைக்கு முன் வாங்கி விட்டோம்
ஊங்கள் மகளுக்காக கூறை வாங்கும்படி எனது மகனெழுதியிருப்பதால் நாங்கள் இந்த கிழமை வாங்க போவோம். நாளைக்கு அல்லது நாளைஇன்றைக்கு வாங்குவோம்
நீங்கள் இவைகளை முன்னேடுத்து வைக்காட்டீ பெரும் விசனம்.

உங்களை நாங்கள் இடையிடைலே ஏவியும் நீங்கள் ..
விவாகத்தை நிறைவேற்றுவதே வசதியாகும்

”எண்ணித் துணிக்குமம் துணிந்தபின்
எண்ணுவமென்பது திழுக்கு”திருவள்ளுவர்”

**Verse to Wife (மலருக்கு )by ABK**

## மலருக்கு

பொற்பாத துத்தியம்

(தொடர்ச்சி)

சூரியன் கீழிக்க தோன்றுமெல்
லாம்
சொப்பனம் போன்றவீன் மாயையன்றோ?
பாரினில் மாந்தர் பதிவாழ்வு
பரிதிமுன் காணும் பனிபோலும்
நீரின்ல் நேருங் குமிழ்போ
லும்
நிலைநலா தென்பது நிச்சயமால
சீருடன் நித்திய சீவனையே
தேடிப்பொற் பாதந் துதிப்பம்
நாமே.

-----

நாடக மாமிந்த நானிலத்தில்
நாளை யிருப்ப தசாத்தியமே
வாடிடா நித்திய வாழ்வளிக்கும்
வள்ளலை யெங்கள் மனுவேலைத்
தித்திக்க மாநர்தத் தெள்ளமு
தைப்
பாடியே நித்தமுங் கூடிக்கூடிப்
பணிந்துபொற் பாதந் துதிப்பம்
நா மே

------------

அய்யனின் சித்த மெதோ அதுவே
ஆகுமா மென்பது நிச்சய
மே

மெயயநய் நலம்தால் மேவுமென்
விவிலிநூல் சொன்ன விதியை
யெண்ணி
துய்யன் கிருபை துணைவேண்டித்
துயாக் கடலின் சுழல்தாண்டி
வையகம் பொய்யெனும் வாக
குணர்ந்து
வதழ்த்திப்பொந் பாதம் துதிப்
பம் நாமே.

எருசலெ மென்திரு ஆலயமே
எஏன்றும் நான் ஆசித்த வீட
தென்றே
உரிமையால் மரண உவகை
பொங்கி
உலகை மறந்தே துதிபாடி
அருகி அவன்பால் அகமகிழ்ந்தே
ஆசந்த வின்பக் கதிசேரத்
துருவாய் வரமே யெனவிரந்து
தாழ்ந்துபொற் பாதம் துதிப்
பம் நாமே

-----

"வீடலால வாயிலாய்" என்ற மெட்டு
காயமான தோகனாக் காணமல்போற்
கழியுமால்
மாயமான வாழ்வினில் மயங்கியாம்
வதங்கமுன்
நேயமான நீதனின் நிழலிலே நிலைத்த
லன்
சாயலாக வேவரச் சாமியா சியீவையே

முப்பத்தொன்றிலன்று படிப்பில்
பாடப்பட்ட பாக்கள்.

**Verse Published in Newspaper by ABK**

3 வேதனைப் படுத்தி யெம்மை
விழுத்தியே யழுத்துந் தீய
சோதனைக் குட்ப டாதுன்
தூயதாள் பணிந்து தாசன்
போதனை பறிந்து ஞான்றும்
புகழுடன் வழுவா நல்ல
சூதனை யாலே காட்டத்
தற்பரா ! அருள்செய் வாரே

4 அன்புள அருமை நாதா !
அண்ணலே அன்று நீயுன்
இன்புள சீஷர் தம்மேல்
இதமுடன் ஆசி பெய்து
துன்புள உலகிற் சென்று
துயர்பல போக்கச் செய்தாய்
நன்பொடுன் தொண்ட னுக்கும்
நல்குவாய் வரங்கள் நீயே

A.B.K
"அனுக்கிரகபதி"
தெல்லிப்பழை , 17-3-43.

**Verse on Pride (வெண்பா)by ABK**

## வெண்பா

1. பெருமை யென்னும் மடமைப் பிசாமதைப் போக்கி
அருமையாம் தாழ்மைதனே ஆளின் உரிமையுடன்
மென்மேலும் ஓங்கியிதம் மேன்மைற்று வாழ்வீர்கள்
இன்னதிதே ஏற்பீர் இசைந்து.

2. அந்திசாதி நீவீர் அவன்பாதம் போற்றிவரின்
சந்த தமும் காப்பனும் சந்ததியை - சொந்தமாய்
அன்யெனும் நல்ல அருஞ்சுவையைக் கையாளின்
இன்புற்ற வாழ்வீர் இகத்து.

3. ஒற்றுமை நாடுங்கள் ஒன்றெனவே வாழுங்கள்
பற்றுடையோன் சொல்லேப்பின் பற்றுங்கள்- உள்ளூர்
ஒருவரது பாரம் ஒருவர் மிகத் தாங்கி
வருகுவதே அன்பின் வழி.

A B Kumarakulasinghe